மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

3 | 15 - 5 - 54 | இதழ் 2



சேலம் மாநாட்டுக் காட்சிகள்

...நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளி நாடு அணா ...

அண்ணாவும் ஆச்சாரியாரும்

அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வெளியேறிய காலத்தில் பொதுவிவாதக் கூட்டங்களில் தாமே சென்று வலுவிக்கக் கலந்துகொள்வது அவரது வியப்புக்குரிய பழக்கமாக இருந்தது.

சென்னையில், பொதுமண்டபங்களில் விவாதக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படும்போதெல்லாம், அறிஞர் அண்ணாவை அம் மண்டபங்களில் பார்த்துக் கொள்ளலாம். அண்ணா அவர்கள் வந்து கூட்டத்தில் அமர்ந்திருக்கிறார்கள் என்ற உணர்வு, கூட்டத்தினரிடையே பரபரப்பையும், மகிழ்ச்சியையும் உண்டாக்கும். கூட்டத்தின் தலைவர், அன்று எடுத்துக்கொள்ளப்படும் பொருள் குறித்து ஒட்டியோ வெட்டியோ பேசுவோர் கூட்டத்தில் உண்டா என்று கேட்டுவிட்டால் போதும், உடனே அண்ணா அவர்கள் மேடைமீது தாவி, தம் கருத்துக்கு இயைந்த பக்கத்தில் நின்று, சொல்லம்புகளை மாற்றார் தடுக்கவும் தாங்கவும் இயலாத வகையில் தொடுப்பார். கூட்டம் பெரும்பாலும் அண்ணாவின்பக்கம் நிற்கும்.

ஒருபொழுது சென்னை ஒய். எம். சி. ஏ. விவாத மன்றத்தில், "ஆலயப்பிரவேசத்துக்கு ஆகமத்தின் அனுமதி தேவையா?" என்ற பொருள்பற்றித் தோழர் சி. இராஜகோபாலாச்சாரியார் தலைமையில் ஒரு விவாதக்கூட்டம் கூட்டப்பட்டது. கூட்டத்திற்கு அண்ணாவும் சென்றிருந்தார். பொருளை ஒட்டியும் வெட்டியும் சிலர் பேசினர். அண்ணா அவர்கள் பேசும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டு, மேடைமீது பாய்ந்து நின்று, ஆலயப்பிரவேசத்துக்கு ஆகமத்தின் அனுமதி அவசியமில்லை என்பதுபற்றிப் பேசத்தொடங்கினார். கடல்மடை திறந்தாற்போல் அண்ணாவின் வாயினின்றும் கருத்துவெள்ளம் கரைபுரண்டு வந்துகொண்டேயிருந்தது. அண்ணாவின் பேச்சு காரசாரமாக இருப்பதைக் கண்ட ஆச்சாரியார் அடிக்கடி சட்டையைப் பிடித்து இழுத்து நிறுத்த முயன்றார். அண்ணா அவர்கள் சற்று விலகி நின்றுகொண்டு, "ஆலயப்பிரவேசத்துக்கு ஆகம சாஸ்திரத்தின் அனுமதி உண்டா என்று ஆராயத் தொடங்குகிறார்கள் சிலர். தலைமை வகிக்கும் ஆச்சாரியார் எந்த ஆகம சாஸ்திர விதியை ஆராய்ந்து, காந்தியார் மகனுக்குத் தம் மகளை மணம் செய்துகொடுத்தார்?" என்று பேசிக்கொண்டு செல்லும்போது, "சொந்த விஷயத்தைப் பற்றிப் பேசாதே!" என்று எச்சரிக்கை செய்தார்.

உடனே அண்ணா அவர்கள், ஆச்சாரியார் பக்கம் திரும்பிப் பார்த்து, "நீர் பொதுச் சொத்தாக்கப்பட்டுவிட்டீர். உமக்கு என்று சொந்த விஷயம் இருப்பதாக யாரும் ஏற்பதில்லை. உமது ஒவ்வொரு நடவடிக்கையையும் பொதுமக்கள் கவனித்தே தீருவர்" என்று காரசாரமாக விடையிறுத்தார்.

ஆச்சாரியார் அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த தோழர் டி. செங்கல்வராயனிடம், "பார்! எப்படி விஷத்தைக் கக்குகிறான் என்று பார்!" என்று சொல்லி ஆயாசப்பட்டுக்கொண்டார்.

அண்ணாவின் சொல்லாற்றலை அன்றுதான் ஆச்சாரியார் முதன்

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

15 - 5 - 54 சனிக்கிழமை

சுயமரியாதைத் திருமணங்கள்

சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்கும் மசோதாவை, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற முடிவு, சென்னை சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

நடந்துபோன சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்க இந்த மசோதா பயன்படுகிறது; அதுவரையில் நாம் மகிழ்ச்சியடையலாம். ஆனால், இனி நடைபெறக்கூடிய சுயமரியாதைத் திருமணங்களைப்பற்றி மசோதா எந்தவிதக் கவலையும்படவில்லை—எந்தவிதத் தகவலையும் தரவில்லை; அதுகுறித்து நாம் வருந்தவேண்டியவர்களாக இருக்கிறோம்.

அண்மையில் சென்னை உயர்நீதி மன்றத்தில் வந்த வழக்கொன்றில், சுயமரியாதைத் திருமணம் செல்லுபடியாகாது என்னும் கருத்துப்பட தீர்ப்பு ஒன்று அளித்து, அதன்படி சுயமரியாதைத் திருமணத்தின்மூலம் பிறந்த குழந்தைகளுக்குச் சொத்துரிமை போன்ற உரிமைகளில் பாதுகாப்பு ஏதும் இல்லாமற் செய்துவிட்டதால், அந்தக் குறையைப் போக்கவே, இந்த மசோதா கொண்டுவரப்பட்டதாகச் சட்ட அமைச்சர் கூறியுள்ளார். சட்ட அமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் மேலும் குறிப்பிடும்போது, "ஒரு திருமணம் நடந்திருந்து அதில் யாதொரு முறையும் இல்லாதிருந்தால், அந்த முறையையே இந்த மசோதா கொடுக்கும் அதற்குமேல் ஒன்றும் இதில் இல்லை" என்று திட்டவட்டமாகச் சொல்லியுள்ளார்.

ஜனநாயகப் பண்பு கொண்டிருப்பதாகக் கூறிக்கொள்ளும் இன்றைய அரசியலார், அந்தப் பண்புக்கு ஏற்றபடி நடக்கும் நல்லெண்ணம் உடையவர்களென்றால், இந்து, இஸ்லாம், கிருத்தவம், பௌத்தம், ஜைனம், சீக்கியம் போன்ற பல்வேறு மதங்களைப்பற்றிய திருமண முறைகளையெல்லாம் ஒப்புக்கொள்ளும் அதே நிலையில், பகுத்தறிவு நெறியினர் கடைப்பிடிக்கும் சுயமரியாதைத் திருமணத்தையும் ஒப்புக்கொள்ள முனைந்திருக்கவேண்டும். அதை விடுத்து இனி நடக்கும் சுயமரியாதைத் திருமணங்களை ஏற்றுக்கொள்ளும் எண்ணமில்லை, அவையெல்லாம் பதிவு செய்யப்பட்டவைகளாக இருக்கவேண்டும் என்னும் கருத்தில் அரசியலார் பேசுவது, எந்த அளவுக்கு அரசியலாரின் மதச்சார்பற்ற தன்மையைக் காட்டுகிறதோ தெரியவில்லை. சட்ட மன்றத்தில் பேசும்போது எதிர்க்கட்சி உறுப்பினர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் "மதச்சார்பற்ற சர்க்கார் என்று பறைசாற்றிக்கோள்ளும் சர்க்கார் மதச் சடங்குகளின்படி நடக்கும் திருமணங்கள் தாம் முறையானவை என்று கூறுவது நியாயமல்ல" என்று சுட்டிக்காட்டியிருப்பது போற்றுவதற்குரியதாகும்.

அல்லது அரசியலார், வேறு வகையில் ஜனநாயகப் பண்பை நிலைநாட்ட விருப்பமிருப்பின், சுயமரியாதைத் திருமணங்கள் இனிமேல் பதிவு செய்யப்படவேண்டும் என்று எப்படி வற்புறுத்துகிறார்களோ அதேபோல் எல்லாவகைத் திருமணங்களும் பதிவு செய்யப்படவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கலாம். அந்த நிலை எல்லா மக்களுக்கும் ஓரேவிதப் பொறுப்புணர்ச்சியையும், ஓரேவிதக் கடமையுணர்ச்சியையும் தருவதோடு, மதச்சார்பற்ற-பாகுபாடு அற்ற ஆட்சி இன்றைய ஆட்சி என்ற தன்மையையும் வலியுறுத்துவதாக அமையும். சுயமரியாதைத் திருமணக்காரர்களுக்கு மட்டும் தொல்லைகள் கொடுப்பது, அவர்களின் திருமணமுறையைச் சட்டப்படி இனி ஏற்றுக்கொள்வதில்லை என்று கூறுவது எப்படி நீதியின்பாற்பட்டதாகும்?

திருமணங்கள் எல்லாமும் பதிவு செய்யப்படவேண்டும் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டால்தான், எல்லார்க்கும் ஒரே நீதி வழங்கும் தன்மை நிலவுவதாகக் கொள்ளமுடியும்; காலநிலைக்கும், வளர்ந்துவரும் உலக நாகரிகக் கருத்

கருத்துக் கதிர்

ஊழல் நாற்றம் எங்கும் வீசுகிறது

பண்டித நேரு ஆட்சியின் கீழ், வடநாடு வளம்பெறுவதற்காக, ஏறத்தாழ ரூ. 140 கோடி செலவில், வடநாட்டில், தாமோதரப் பள்ளத்தாக்குத் திட்டம் என்று ஒன்று நிறைவேறிவருவதை யாவரும் அறிவார்கள். அந்தத் திட்டம் எப்படி நிறைவேறுகிறது என்பதைக் கண்டறிந்து, அறிக்கையொன்று நீட்ட வேண்டி, தோழர் பி. எஸ். ராவ் ஐ. ஸி. எஸ். அவர்கள் தலைமையில் ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. திட்டம் நிறைவேறுவதில் எப்படிப்பட்ட ஊழல்கள் நடைபெறுகின்றன என்பதற்குத் தோழர் பி. எஸ். ராவ் தரும் செய்திகளில் சிலவற்றைக் கீழே தருகிறோம்.

1. "நிபுணத்துவம் அற்ற ஆலோசனையாலும், அடிக்கடித் திட்டத்தை மாற்றிக் கொண்டே இருப்பதாலும் ஏராளமான செலவுகள் வளர்ந்து, பொதுப்பணம் வீணாவதற்குக் காரணமாகின்றன."

2. "சொஸைட்டி டி கன்ஸ்ட்ரக்ஷன் டெஸ் பாட்டிக்னோலெஸ் என்ற பிரெஞ்சுத் தொழிற்கூடத்தோடு கான்ட்ராக்ட் செய்து கொண்டது பெரிய தவறாகும்; மெஸர்ஸ் கிரன்னர் பிரதர்ஸ் என்ற சுவிட்ஜர்லாந்து தொழிற் கூடத்தாரை வேலைக்கு வைத்துக் கொண்டது பெரிய துர்அதிர்ஷ்டமாகும்."

3. "ஹிந்த்-பட்டேல் கம்பெனியாரும் செய்துகொண்ட சில ஒப்பந்த விகிதங்கள் மிகவும் அதிகமானவையாகும். எந்தவகையிலும் ஒப்புக்கொள்ளமுடியாத விதத்தில் அவர்களுக்கு அதிகப்படியாகச் செலுத்தி இருக்கும் தொகை ரூ. 1,19,00,000 ஆகும்"

4. "இந்த அதிகப்படியான தொகை செலுத்தப்பட்டதற்குக், தாமோதர பள்ளத்தாக்குக் கார்பொரேஷன், என்ஜினியர்கள், கிரன்னர் பிரதர்ஸ், கான்ராக்ட்காரர்கள் ஆகிய எல்லோரும் குற்றவாளிகளாகிறார்கள்."

5. "தாமோதரப் பள்ளத்தாக்குக் கார்பொரேஷனின் ஒழுங்கற்ற நிர்வாகத்தின் காரணமாக கோனார் திட்டத்தில் மட்டும் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 1,64,00,000 ஆகும்."

இவ்வாறு சற்றுத்தாழ ரூ. 3 கோடி, நிர்வாக ஊழல்களின் காரணமாகப், பொதுப்பணம், கண்ணுக்குத் தெரிந்து வீணாகியிருக்கின்றது என்றால், கண்ணுக்குத் தெரியாமல் போன கோடிகள் எவ்வளவோ? இந்தியத் துணைக் கண்டம் இன்னும் எத்தனை நாட்களுக்கு இப்படிப்பட்ட ஊழல்களைப் பொறுத்துக் கொண்டிருக்குமோ?

ஃ ஃ ஃ

பச்சைப்பொய் பகருவது ஏன்?

சென்னை ஸ்தல ஸ்தாபன மந்திரி தோழர் எஸ். எஸ். இராமசாமியார், மந்திரிப்பதவி ஏற்றவுடன் 'முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைக்கும்' வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்.

27-4-54-ம் நாள் பத்திரிக்கை நிருபர்களுக்கு அளித்த பேட்டியின்போது, காங்கிரஸ் கட்சியுடன் அரசியல் விஷயத்தில் எங்களுக்கு எப்பொழுதும் எத்தகைய கருத்துவேற்றுமையோ, முரண்பாடோ இருந்தது கிடையாது."—என்று தோழர் எஸ். எஸ். ஆர். பேசியுள்ளார். தேர்தல் காலத்தில் உழைப்பாளர் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் இந்தக் குரல் ஒலிக்கிறதா என்று 'கனம்' ஆன மந்திரியாரைக் கேட்கிறோம். தேர்தல் காலத்து அறிக்கைக்கும், இப்பொழுது வெளியிடும் அறிக்கைக்கும் உள்ள 'வேற்றுமையையும் முரண்பாட்டையும்' ஏனோ அமைச்சர் மறந்துவிட்டார்? காரணம் 'அமைச்சர்' ஆனதுதானோ என்னவோ!

துக்கும் அதுதான் ஏற்றதாக அமையவும் இயலும்.

ஒன்று சுயமரியாதைத் திருமண முறை மற்றைய திருமணமுறைகளைப் போல ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்; அல்லது எல்லாத் திருமணங்களும் பதிவு செய்யப்படவேண்டும். இந்த நிலைமையை உருவாக்க பொதுமக்களின் குரலும், சட்ட மன்ற உறுப்பினர்களின் உரிமையும் பயன்படுவனவாக!

மேலும் மந்திரியார் பச்சைப் பொய்யை துணிந்து வெளியிடுகிறார். "அசெம்பிளி தேர்தலின்போது தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி எந்த இதரக் கட்சிகளோடும் எவ்வித ஒப்பந்தமும் செய்துகொள்ளவில்லை" என்று கூறுகிறார். தேர்தல் காலத்தில் உழைப்பாளர் கட்சியின் பேரில் தேர்தலுக்கு நின்றவர்கள் அனைவரின் சார்பாகத் தோழர் எஸ். எஸ். ராமசாமி அவர்களே கையெழுத்திட்டு, ஒப்பந்தத் தாளை அறிஞர் அண்ணாவிடம் அனுப்பிவைத்ததை, அமைச்சர் இவ்வளவு விரைவாக மறந்துவிடுவார் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. காங்கிரஸுடன் சேரமாட்டேன், காங்கிரஸுக்கு ஆதரவு தரமாட்டேன் என்னும் கருத்துப்பட 'கனம்' அமைச்சர், 'இலேசாக' இருந்தகாலத்தில் அறிஞர் அண்ணாவுக்கு விடுத்த கடிதத்தையும் மறந்துவிட்டார் போலும். பதவி மோகம் கண்ணையும், காதையும், கருத்தையும், நினைவையும் மறைக்கும் போலும்! தோழர் எஸ். எஸ். இராமசாமியாரின் இன்றைய நிலை கண்டு இரங்குகிறோம்!

ஃ ஃ

உண்மையான கூற்று

"நியூயார்க் டைம்ஸ்" என்ற பத்திரிக்கை, உலகில் மதங்களின் நிலைமையும், மக்களின் மனப்போக்கும் எப்படியிருக்கின்றன என்பதை ஆராய்ந்தறிவதற்கு முயற்சி ஒன்று எடுத்தது. இறுதியில் அறிக்கையொன்று தயாரித்து அது வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கை இந்தியாவில் கம்யூனிஸ்டுகள் எப்படியிருக்கிறார்கள் என்பதைக் கீழ்க்கண்ட சொற்களால் விளக்கிக் காட்டியுள்ளது. அவையாவன :—

"இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்டுக்கட்சி நாத்திகக் கொள்கைகளினின்றும் தன்னை விடுவித்துக்கொண்டிருப்பது குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். அது ஹிந்து மதத்தின் மனப்பான்மைக்கு ஏற்ப தன்னுடைய திட்டத்தைக் கொண்டுவந்து கொண்டிருக்கிறது.

இந்தியக் கம்யூனிஸ்டுகள் சமுதாய நீரோடையில், ஓடும் நீரோடு சேர்ந்து ஓட விரும்புகிறார்களேயொழிய, எதிர் நீச்சலில் செல்ல அவர்கள் ஒருக்காலும் ஒருப்படுவதில்லை என்று நாம் அடிக்கடி வற்புறுத்திக் கூறும் கூற்று, எவ்வளவு உண்மையான கூற்று என்பது, மேற்கண்ட அறிக்கையால் நன்கு தெளிவாக்கப்பட்டிருப்பதை யாவரும் உணரலாகும்.

ஃ ஃ ஃ

விபசாரத்தடை

வளர்ந்துவரும் விபசாரங்களைத் தடைப்படுத்தும் திருத்த மசோதாவைச் சென்னைச் சட்டமன்றம் நிறைவேற்றியிருப்பது போற்றி வரவேற்க வேண்டியதாகும். சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கும் அரசியலார், எந்த அளவு திறமையோடு அதனை அமுலாக்கப்போகிறார்கள் என்பதிலேதான், வழக்கமாக ஏற்படும் ஐயப்பாடு ஏற்படுகிறது. மதுவிலக்குச் சட்டத்தை அமுலாக்கிவரும் தன்மையைப்போலவேதான் இதுவும் அமைந்துவிடுமோ என்று ஐயங்கொள்ளவேண்டியிருக்கிறது.

விபசாரத் தடைச் சட்டம் ஏற்கனவே அமுலில் இருந்துதான் வருகிறது என்றாலும், அது போற்றக்கூடிய வகையில்—போதுமான அளவில் வேலை செய்துவரவில்லை என்பதை நாடு நன்கு உணரும். அதற்குச் சட்டத்திலுள்ள சில பல குறைபாடுகளே முக்கிய காரணங்கள் என்று போலீஸ் அதிகாரிகள் சொல்லியதன் பேரில், அந்தச் சிலபல குறைபாடுகளைப் போக்கும் எண்ணத்தில், இப்பொழுது திருத்தச் சட்ட மசோதா கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. திருத்தப்பட்ட சட்டம் எந்த அளவுக்கு வெற்றியைத் தரப்போகிறது; குறை சட்டத்திடத்திலா அல்லது அமுலாக்கும் அதிகாரிகளிடத்திலா என்பது போகப்போக புலனாகிவிடும்.

விபசாரத்திற்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்திருப்பவைகளைக் கண்டறிந்து, அந்தக் காரணங்களை அறவே அகற்ற முயன்றால்தான், விபசாரக் கொடுமையை ஓரளவுக்குத் தடுக்க இயலும். விபசாரம் சமுதாயத்தின் ஒழுங்கைச் சீர்குலைக்கிறது; ஆணும் பெண்ணும் வாழ்க்கைத் துணைவர்களாக அமைந்து அவர்களிடத்தில் நீடித்து வளரவேண்டிய அன்பை அறவே அற்றுப்போகச் செய்கிறது; தொத்து நோய்களைப் பரவச்செய்கிறது; வலிவற்ற—குறைபாடுகளையுடைய குழந்தைகளை உற்பத்தியாக்குகிறது; சமுதாயத்தின் வனப்பையும், வளத்தையும், வசதியையும் கெடுக்கிறது. இந்தத் தீய தன்மைகளை உணர்வதற்

கான சூழ்நிலை ஏற்பட்டால்தான் விபசாரம் ஒழிய வழி ஏற்படும். விபசாரத்திற்கு வறுமை, அறியாமை, சமூக அமைப்பு ஆகியவைகள் முக்கிய அடிப்படைக் காரணங்களாக அமைந்திருக்கின்றன.

வாழ்க்கையில் இன்றியமையாதனவாகத் தேவைப்படும் வசதிகளைச் செய்துகொள்ளப் பெருந்துணையாக இருக்கும் பொருளைச் சம்பாதிக்க, மகளிர் தங்கள் உடல்களை 'வாடகைக்கு' விடவேண்டியவர்களாகிவிடுகிறார்கள். அந்த அளவுக்கு வறுமை அவர்களைக் கொடுமைப் படுத்துகிறது. விபசாரத்தைப் பொருளீட்டுவதற்கான சுலபமான வழியாக ஆக்கிக்கொண்டு விடுகின்றனர். இந்த வழியில் பெண்கள் வழுக்கி விழாமலிருக்கவேண்டுமானால், வறுமை போக்கப்பட்டால்தான், வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட்டால்தான் ஆகும். பெண்கள் தங்களை விற்று வாழவேண்டிய ஈன நிலை ஏற்படாமற் போய்விட்டால், பெண்களைக் கூட்டி வைத்துக்கொண்டு, அவர்களை 'வாடகை'க்கு விட்டு வாழும் ஈனர்களும் ஒழிந்துபோவார்கள்.

முன்கூட்டியே முதலிலேயே தமக்கேற்ற தமக்கு விருப்பமான வாழ்க்கைத் துணைவர்களை ஆணோ, பெண்ணோ பெறமுடியாமல்போய்விட்டால், அப்படிப்பட்டவர்கள் விபசாரத்திற்கு வழியமைத்துக்கொள்கிறார்கள். இது அறியாமையால் ஏற்படும் கொடுமையாகும். இது போதுமான மணக்கல்விமுறையாலும், உலகியல் பொது அறிவு வளர்ச்சியாலும் போக்கப் படவேண்டும்.

சமூகக் கட்டுப்பாடுகளின் காரணமாக, வலுக்கட்டாயமாக, விரும்பாத நிலையில், விருப்பமில்லாதவர்களோடு திருமணம் செய்விக்கப்படுவதும், விதவை நிலையை வற்புறுத்தி வருவதும், சிலவேளைகளில் விபசாரத்திற்கு வழிகளாக அமைந்துவிடுகின்றன. இத்தகைய சமூகக் கட்டுப்பாடுகள் அறவே ஒழிக்கப்பட வேண்டும்.

இந்த அடிப்படைக் காரணங்களை அறவே அகற்ற அரசியலாரும், சமூகச் சீர்திருத்தக் காரர்களும், பொது நல்லறிஞர்களும் முன்வருவார்களாக!

அட்டைப்பட விளக்கம் :

1954 மே திங்கள் 1, 2 நாட்களில் சேலத்தில் நடைபெற்ற

சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக

2-வது மாநாடுகளின் காட்சிகள்

மேல்-இடது : அரசியல் மாநாட்டுத் தலைவர் வழக்கறிஞர் தோழர் இரெ. இளம்வழுதி எம். ஏ., பி. எல். அவர்கள்.

மேல்-நடு : மாநாட்டுப் பந்தலின் முகப்புத் தோற்றம்.

மேல்-வலது : சமுதாய மாநாட்டுத் தலைவர் திருவண்ணாமலை முன்னாள் நகரமன்றத் தலைவர் தோழர் ப. உ. சண்முகம் அவர்கள்.

கீழ்-இடது : மாநாட்டில் கூடியிருந்த ஆண்கள் பகுதியின் ஒரு பக்கத் தோற்றம்.

கீழ் வலது : மாநாட்டில் கூடியிருந்த பெண்கள் பகுதியின் ஒருபக்கத் தோற்றம்.

இந்தோ-சீனு

[இரா. செழியன்]

கொரியாப் போர் ஓய்ந்ததும், உலக மக்களின் கவனம் இந்தோ-சீனு பக்கம் திரும்பியிருக்கிறது. அங்கு நடைபெறும் போராட்டம் அளவிலும், வலுவிலும் வளர்ந்துகொண்டே போகிறது. இந்தோ-சீனு சண்டையின் வெற்றி-தோல்விகளில், தங்களுடைய பலத்தைக் கணக்கிட்டவண்ணம் உலக வல்லரசுகள் இருக்கின்றன. இந்தோ-சீனு சண்டையை வளரவிட்டால் அது எங்கு மூன்றாவது உலகப் போருக்கு அழைத்துச்செல்லுமோ என்ற அச்சம் மற்ற நாடுகளுக்கு உண்டாகியிருக்கின்றன. அன்றியும் கொரியா, இந்தோ-சீனு இவைகளில் நீடித்த—நிலையான அமைதியைக் காணுமல், உலக சமாதானம் என்ற பேச்சுகள் அர்த்தமற்றவை என்ற நிலையில்தான், தூரக்கிழக்கு நாடுகளின் சமாதானம்பற்றி வல்லரசுகளின் பிரதிநிதிகள் கூடியுள்ளனர். சண்டையில் சம்பந்தப்பட்டுள்ள நாடுகளும், பகுதிகளும் அங்கு அழைக்கப்பட்டிருக்கின்றன, போர் நிறுத்தத்துக்கான திட்டங்களைப் பற்றிப் பேச. அதிலும் இந்தோ-சீனு வட முனையில் முக்கிய கோட்டையாக விளங்கிய தீன்-பீன்-பூ விடுதலைப் படையினரால் கைப்பற்றப்பட்டதும், வல்லரசுகளுக்கு நெருக்கடி அதிகரித்துள்ளது. விரிவான முறையில் பெரும்போர் மூளுவதற்கு முன் சமாதானம் வரவேண்டிய அவசியம் வற்புறுத்தப்படுகிறது. ஜினிவாப் பேச்சுகளில் உருவான பலன்கள் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், இந்தோ-சீனு புறக்கணிக்கமுடியாததாகிவிட்டது. அதன் முடிவு தூரக்கிழக்கு நாடுகளின் அமைதியை மட்டுமல்லாமல், ஆசிய நாடுகளின் சுதந்தர எதிர்காலத்தை மட்டுமல்லாமல், ஐரோப்பிய-அமெரிக்க வல்லரசுகளின் நிலைமையையும் பாதிப்பதாக இருக்கிறது. மாநிலத்தின் பெரும் மண்டலங்களைக் கட்டியாளும் பிரெஞ்சு ஏகாதிபத்தியம் ஓர்புறம் நிற்கிறது போராட்டத்தில், அதற்குத் துணையாக பிரிட்டிஷ் அரசியல் ஆதரவும், அமெரிக்கப் பொருளாதார உதவியும் இருக்கின்றன. அதை எதிர்த்து நிற்கும் வியட்மின் விடுதலைப் படையினருக்கு சோவியத் அமைப்பின் ஆதரவும், செஞ்சீனுவின் உதவியும் இருக்கின்றன. போர் வலுவடைந்தால், வல்லரசுகள் நேரிடையாகத் தாக்கிக்கொள்ளக்கூடிய—தாக்கிக் கொள்ள வேண்டிய இடமாக இந்தோ-சீனு ஆகிவிடக் கூடும்.

இந்தோ-சீனுவில் ஏற்பட்டுள்ள போர், அடிப்படையில் பார்த்தால், ஏகாதிபத்தியங்களை எதிர்த்து ஆசிய நாடுகளில் எழுந்த விடுதலைப் போராட்டத்தின் தொடர்ச்சியாகும். அது, இரண்டாவது உலகப்போரின்பின் உருவாகியுள்ள புதிய அரசியல் சூழ்நிலையில் ஒரு பகுதியாகும். அதில் உலகப்படத்தில், பல இடங்களில் பச்சை வர்ணத்தைத் தீட்டிவிட்டு, பழம் பெரும் ஏகாதிபத்தியமாக விளங்கும் பிரெஞ்சு ஏகாதிபத்தியம், நாட்டு மக்களின் விடுதலைப் போராட்டத்தின்முன் நிற்கமாட்டாது தத்தளிக்கும் காட்சியைக் காண்கிறோம். ஏழெட்டு ஆண்டுகளாக நடந்திடும் போரில், அமெரிக்காவின் டாலர், கணக்கு வரையரையின்றி வாரியிறைக்கப்படுகிறது; யுத்த தளவாடங்கள் குவிக்கப்படுகின்றன; நெருக்கடியைத் தீர்த்திட, அமெரிக்க விமானங்களில் பிரெஞ்சு வீரர்கள் இறக்குமதி செய்யப்படுகின்றனர்; விடுதலைப் படையினரைத் தாக்குகிற விமானங்களுக்கு, அவர்கள்மீது வீசப்படுகிற குண்டுகளுக்கு அளவு கிடையாது. இருந்தாலும் பலமான எதிர்த்தாக்குதல் வருகிறது, பயங்கரச் சண்டை தொடர்கிறது, கடைசியாகத் தீன்-பீன்-பூ கோட்டையை பிரெஞ்சுப்படை இழந்து பின்வாங்குகிறது. விடுதலைப் படை முன்னேறித் தாக்குகிறது. இந்த நிலைமை நீடிக்கும் என்று நாம் கூறமுடியாது. பிரெஞ்சு ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவாக, அமெரிக்காவின் உதவி அதிகரித்தால், அமெரிக்காவின் தூண்டுதலின்பேரில் மற்ற நாடுகள் போரில் ஈடுபட்டால், கொரியாவில் நடந்ததைப் போன்று, வெளிநாட்டுப் படைகள் இந்தோ-சீனுவில் பிரவேசித்து சண்டையின் போக்கை மாற்றியமைக்கக்கூடும். ஆனால் வெளியுதவியில்லாமல், விடுதலைப் படையினரை அடக்கிவிடும் ஆற்றல் பிரெஞ்சு ஆதிபத்தியத்துக்குக் கிடையாது.

இந்தோ-சீனாவில் நடைபெறும் போராட்டம், ஏகாதிபத்திய ஆட்சிமுறைக்கு எழுந்துள்ள எதிர்ப்பாகும். அத்துடன், அதன் நிலவமைப்பு, நாட்டுவளங்கள், வரலாறு, அரசியல் மாற்றங்கள், அண்டை நாடுகளின் போராட்டங்கள், ஏகாதிபத்தியங்களுக்கு அங்குள்ள தேவைகள் இவைகளும், இந்தோ-சீனா சண்டையில் இருக்கின்றன.

நிலவமைப்பு

இந்தோ-சீனா என்பது, வியட்நாம், லயாஸ், கம்போடியா என்று மூன்று பகுதிகளைக்கொண்டது.

வியட்நாம் என்பது—இங்குதான் தற்பொழுதைய சண்டைகள் நடைபெறுவதாகும்—மேற்குப் பக்கத்தில் மேலிருந்து கீழ்வரை நெடுகிலும் பரவியிருக்கிறது. அவர்களுடைய மொழியில் வியட்நாம் என்றால் வியட்டிற்குத் தெற்கேயுள்ள நாடு என்று பொருள். எல்லையோரமாகச் சீனாவில் இருக்கும் மாகாணத்தின் பெயர் வியட். அதற்குத் தெற்கே இருக்கிற காரணத்தால், 'வியட்நாம்' என்ற பெயர் வந்தது. வியட்நாமின் வடக்குப் பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் செழிப்பான சமவெளிகள் இருக்கின்றன. வடக்குப் பகுதியில் இருக்கும் சிகப்பு நதிதீரத்தில், ஹனாய் என்ற முக்கிய நகரமும், தெற்கும் பகுதியில் சைகான் நகரமும் இருக்கின்றன. வியட்நாமில், வடக்கிலிருந்து தெற்காக டோன்கின், அன்னம், கோச்சின்-சீனா என்ற மூன்று மாகாணங்கள் இருக்கின்றன.

வியட்நாமுக்கு மேற்கில் லயாஸ், கம்போடியா இரண்டும் இருக்கின்றன. இவைகள் பீடபூமிப்பிரதேசங்களிலும் அதிக வளமில்லாதவை.

இந்தோ சீனாவில் மொத்தம் 2 கோடி 76 லட்சம் மக்கள் உள்ளனர். இவர்களெங்கும் சீராகப் பரவியில்லாமல், வடக்கிலும் தெற்கிலும் உள்ள நதிப்பிரதேசங்களிலும், கடற்கரையோரங்களில் மட்டும் குழுமியுள்ளனர். நாட்டு மக்களின் தொகையில் 2 கோடிக்குமேல், சிறிய சமவெளிகளில் வாழ்கின்றனர். விகிதப்படி பார்த்தால், மொத்த மக்கள் தொகையில் 100-க்கு 75 பேர், நாட்டுப்பரப்பில் 100-க்கு 12 பகுதியுள்ள இடத்தில் குடியிருக்கின்றனர். எனவே நாட்டு மக்களில் பெரும்பகுதியினர், விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வியட்நாமில் உள்ளவர்கள் பெரும்பாலும் கன்பூசியஸ் கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்கள். கம்போடிய நாட்டினர் புத்த மதத்தைச் சார்ந்தவர்கள். லயாஸ் நாட்டினர் மாயிஸ் என்ற பழங்கொள்கையைக் கடைப்பிடிப்பவர்கள். நாட்டுத் தொழில்களில் முதலிடம் பெறுவது விவசாயமாகும். அவர்களுடைய தேவைக்கு அதிகமான அளவில் நெல் சாகுபடியாகிறது. இதனால் ஆண்டுதோறும் சுமார் பதினைந்து லட்சம் டன்னுக்குமேல் ஏற்றுமதி செய்கின்றனர். நெல்லுக்கு அடுத்தபடியாக, கப்பு, தென்னை, மிளகு, ரப்பர் முதலியன விளைகின்றன.

இந்தோ-சீனாவில் கனிவர்க்கங்கள் ஏராள

நிலப்பரப்பும், மக்கள் தொகையும்

	சதுரமைல்	மக்கள் தொகை
வியட்நாம்		
—டோன்கின்	44,660	98,51,000
அன்னம்	56,974	71,84,100
கொச்சின்-சீனா	24,974	56,28,000
	126,609	2,26,63,000
கம்போடியா	69,866	56,28,000
லயாஸ்	89,320	11,69,000
	2,85,794	2,75,80,000

மாக இருக்கின்றன. நிலக்கரி, தகரம், துத்த நாகம், ஈயம், இரும்பு, வெள்ளி, பாஸ்பேட்கள், மாங்கனீஸ், இன்னும் மின்சாரக்கருவிகளுக்கு உபயோகப்படும் டங்ஸ்டன், உல்பரம், முதலானவைகள் இருக்கின்றனவாம். ஆனால் அவைகளைத் தோண்டியெடுத்துப், பயன்படுத்தும் வகையில் நாடு தொழில்வளமாக்கப்படவில்லை. விவசாயத்தை நம்பி வாழும் நாடாகவே இந்தோ-சீனா இருக்கிறது.

இந்தோ-சீனாவின் தெற்கிலும், கிழக்கிலும் கடல் சூழ்ந்திருக்கிறது. வடக்கு எல்லை முழுவதும் சீனா இருக்கிறது. வடமேற்கு மூலையில் பர்மா தொட்டு நிற்கிறது. மேற்குப் பகுதியில் தாய்லாந்து இருக்கிறது, இன்னும் கடல்வழியாகச் சென்றால், நேர்கிழக்கில் அமெரிக்காவின் ஆதிபத்தியத்தில் இருக்கும் பிலிப்பைன்ஸ் தீவுகள் இருக்கின்றன. தென்கிழக்கில் போர்னியோ தீவு இருக்கிறது. போர்னியோவில், பிரிட்டிஷ், டச்சு இரண்டு ஏகாதிபத்தியங்களும் ஆளுகின்றன. தென்மேற்குத் திக்கில் மலேயா தீபகற்பம் இருக்கிறது. அங்கு பிரிட்டிஷ் ஆதிபத்தியம் இருக்கிறது. இவ்வாறு பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் கீழ் இந்தோ-சீனா இருக்கிறது, அதைச்சூழ்ந்து, அமெரிக்க, பிரிட்டிஷ், டச்சு ஏகாதிபத்தியங்கள் ஆளும் இடங்கள் இருக்கின்றன. வடக்கே செஞ்சீனா இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், பிரெஞ்சு ஆதிபத்தியத்தின் பிடியிலிருந்து, இந்தோ-சீனா விடுபடுமேயானால், அது உடனடியாக பக்கத்திலிருக்கும் நாடுகளிலும் விடுதலை உணர்வைப் பரப்பி, ஏகாதிபத்தியங்களின் அமைப்பைப் பயமுறுத்தும். அதனால்தான் ஏகாதிபத்திய அரசியல்வாதிகள் இந்தோ-சீனா போரைப் பற்றிக் கவலைப்படுத்துக்கொள்ளுகின்றனர்.

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின்கீழ்

இந்தியாவிற்குள் ஆங்கிலேயர் நுழைந்ததைப் போலவே, இந்தோ-சீனாவிலும் பிரெஞ்சு வியாபாரக் கம்பெனிகள் முதலில் சென்றன. வியாபாரச் சலுகைகள் பெறுவதில் போட்டியிட்டு, சிறுகச்சிறுக படைபலத்தைப் பெருக்கி நாட்டைப் பிடித்துக்கொள்வதில் ஈடுபட்டனர். தராசு பிடித்து வியாபாரம் செய்ய வந்தவர்கள் துப்பாக்கி பிடித்துப் போர்செய்யத் தலைப்பட்டனர், படிக்கல் இருக்கவேண்டிய கரங்களில் பீரங்கிக் குண்டுகள் பறிமாறின. பண்டகசாலை உண்டாக்கிப் பணம் தேடவந்தவர்கள், மாடி வீடு அமைத்து மண்ணை வளைக்க முற்பட்டனர். கடைசியாகப் பிரெஞ்சு ஏகாதிபத்தியம் இந்தோ-சீனாவில் வலுவடையத் தொடங்கியது.

1867-ல் வியட்நாமில் தெற்கு மாகாணமான கொச்சின்-சீனாவை பிரெஞ்சுக்காரர் பிடித்துக் கொண்டனர். பிறகு இடைவிடாது அடிக்கடி போர் நடந்துகொண்டிருந்தது. இருபது ஆண்டுக்குள், பிரெஞ்சுப் படையின்முன் வியட்நாம் மன்னர் பரம்பரையினர் பணியவேண்டியிருந்தது. வியட்நாமின் மற்ற மாகாணங்களான டோன்கின், அன்னாம் பிரெஞ்சு வசமாயின. பின் கம்போடியா, லயாஸ் இரண்டும் அடிமையாக்கப்பட்டன. இந்தோ-சீனா பூராவும் 1883—84-ல் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் கீழ் வந்தது. சிறு சிறு எதிர்ப்புகளும், தடைகளும் வந்தபோதிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்குள், பிரெஞ்சு ஏகாதிபத்தியம் அங்கு நிலைபெற்றுவிட்டது.

பிரெஞ்சு ஆதிபத்தியத்தின் கீழ் இந்தோ-சீனா ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அவையே முன்பு குறிப்பிட்ட டோன்கின், அன்னாம், கொச்சின்-சீனா, கம்போடியா, லயாஸ் இவைகளாகும். கொச்சின்-சீனா தவிர மற்ற பகுதிகளின் சுதேசமன்னர்கள்—பிரெஞ்சு ஆதிபத்தியத்துக்கு அடங்கியவர்கள்—ஆண்டுவர அனுமதிக்கப்பட்டனர். மிகவளப்பம் பொருந்தியதும், செந்நெல் களஞ்சியமாகவும் விளங்கிய கொச்சின்-சீனா மாகாணம் மட்டும் பிரெஞ்சு ஆதிபத்தியத்தின் நேரிடை ஆட்சியில் வைக்கப்பட்டது.

ஏகாதிபத்திய ஆட்சியில் இந்தோ-சீனா சீரழிக்கப்பட்டது. நாட்டின் வளங்கள் சுரண்டப்பட்டு, மக்களின் நிலை மோசமானது. செழிப்பான வயல்களெல்லாம் பிரெஞ்சுக்காரர்களின் கையில் இருந்தன. ரப்பர் தோட்டங்களெல்லாம் பிரெஞ்சு முதலாளிகளுக்குச் சொந்தமானவை. அந்த நாட்டு விளைபொருள்களை ஏற்றுமதி செய்து, பிறநாட்டு உற்பத்திச்சரக்குகளை அங்கு இறக்குமதி செய்தனரேயன்றி, உள்நாட்டில் தொழிற்சாலைகளோ, தொழில் முறைகளோ வளர்க்கப்படவில்லை. நாட்டின் பொருளாதாரமனைத்தும், ஒரு பத்து பிரெஞ்சுப் பாங்குகள் செய்யும் முடிவைப் பொறுத்திருந்தன. நாட்டின் லாபமனைத்தும் பிரெஞ்சு முதலாளிகளின் உல்லாச வாழ்வுக்குப் பயன்பட்டது. மக்களோ புழுப்போலத் துடித்தனர்.

மதுவும், அபினும் மிகக் கட்டாயப்படுத்தி, தொழிலாளரிடத்தும், உழவர்களிடத்தும் விற்கப்பட்டதாம்!

மதுவும், அபினும் தரும் மயக்கத்தில், அறியாமை தூவிய இருளில் இந்தோ-சீனா ஆழ்ந்து கிடந்தது

புரட்சிக்கனல்

இருண்ட வானத்தில் மின்னல்கள் தோன்றி மறைவதுபோல, விடுதலை வீரர்கள், புரட்சிக்காரர்கள் அவ்வப்பொழுது தோன்றினர். 1907-ல் பிரெஞ்சு ஆட்சிக்கு எதிராகச் சதிச் செயல்கள் எழுந்தன. பிரெஞ்சு அதிகாரிகள் சிலர் கொல்லப்பட்டனர். மறைவிலிருந்து சட்ட திட்டங்களுக்கு எதிர்ப்பு காட்டப்பட்டது. ஆனாலும் அந்தப் பயங்கரவாதிகள் இயக்கம் நெடுநாள் நீடிக்கவில்லை. பிரெஞ்சு ஆதிபத்தியம் தன் படைவலிமையைக்கொண்டு, அதை இரத்தவெள்ளத்தில் அமிழ்த்தியது. நூற்றுக்கணக்கான வியட்நாம் வாலிபர்கள் தூக்கிலிடப்பட்டனர், பலர் ஆயுள் தண்டனை பெற்று, கடல்கடத்தப்பட்டனர். பலர் நாட்டைவிட்டுத் தப்பியோடினர். கொடுமையாட்சியில் நாடு அல்லற்பட்டது. விடுதலை இயக்கம் தர வேண்டிய காணிக்கை—அதை வியட்நாம் 1907-ல் தந்தது.

1917—18-ல் உலகச் சண்டைக்குப்பின் ஏற்பட்ட அரசியல் விழிப்பு இந்தோ-சீனாவிலும் எதிரொலித்தது. சீனாவில் சன்-யாட்-சென் செய்த புரட்சி இந்தோ-சீனா விடுதலை வீரர்களுக்குப் புதிய ஊக்கத்தைத் தந்தது. வியட்நாம் மாணவர்களில் பலர் நாட்டிலிருந்து மறைந்து, சீனாவில் சன்யாட்சென் புரட்சியியக்கத்தில் சேர்ந்து பணியாற்றினர், புரட்சிப் பாடம் கற்றுக்கொண்டனர். சிலர் ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று விடுதலை இயக்கத்துக்கு ஆதரவு திரட்டினர். அவ்வாறு சென்றவர்களில் ஒருவர்தான் தற்பொழுது வியட்நாம் விடுதலை இயக்கத்தின் தலைவராக இருக்கும் டாக்டர் ஹோ சி மின் என்பவர். அவர் ரஷ்யாவுக்குச் சென்று, மாஸ்கோவில் நீண்டநாள் தங்கியிருந்தார்.

> பிரெஞ்சு ஆட்சியின்கீழ் இந்தோ-சீனாவில் 100-க்கு 85 பேர்கள் தற்குறிகளாயிருந்தனர். 3245 சிறுவர்களுக்கு ஒரு பள்ளிக்கூடமும், ஆயிரம் கைதிகளுக்கு ஒரு சிறைச்சாலையும், ஒரு மனிதனுக்கு $2\frac{1}{2}$ ஜாடி மதுவும், 14 தோலா அபினும், நாளைக்கு ஒருவேளை அரிசியும் இருந்தனவாம்.

விடுதலை இயக்கம் வர, வர வலுப்பெற்று 1930-ல் மீண்டும் நேரடிப் போராட்டத்தில் இறங்கியது. பிரெஞ்சுப் படையில் சேர்ந்திருந்த வியட்நாம் வீரர்களும் போராட்டத்தின் பொழுது, பிரெஞ்சு அதிகாரத்தை மறுத்து, விடுதலைக்காகப் போராடும் மக்களுக்கு உதவியாக வந்தது. போர்வீரர்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் கிளம்பிவிட்டனர் என்ற செய்தி, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் நேரடிப் போராட்டத்தைத் துவக்கியது. மக்கள் கூட்டம் வீதிகளில் விடுதலைக் கீதத்துடன் வலம் வந்தது. ஆயுதக் கிடங்குகள், போலீஸ் ஸ்டேஷன்கள் சூறையாடப்பட்டன. ஏகாதிபத்திய எதிர்ப்பு இதற்குமுன் என்றுமில்லாத அளவு நாடெங்கும், பட்டி தொட்டி தோறும் காட்டப்பட்டது.

திடீர்த் தாக்குதலால், பிரெஞ்சு அரசாங்கம் முதலில் திகைத்தபோதிலும், போராட்டத்தை அடக்க தனது படைபலத்தை அனுப்பியது. விடுதலை இயக்கத்தினருக்கு ஆதரவு தந்த கிராமங்கள்மீது பிரெஞ்சு விமானங்கள் வெடிகுண்டுகளை வீசின. பிரெஞ்சுப் படைகள் மக்கள் கூட்டங்கள்மீது மெஷின் துப்பாக்கிகளைக்கொண்டு சுட்டது. அடக்குமுறைச் சட்டங்கள் பிரயோகிக்கப்பட்டன, கூட்டங் கூட்டமாக சிறைச்சாலையில் மக்கள் அடைக்கப்பட்டனர். சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. கடுந்தண்டனைகள் தரப்பட்டன. நூற்றுக்கணக்கான வாலிபர்கள் தூக்குமேடை நோக்கிச் சென்றனர். "வாழ்க வியட்நாம்! வாழ்க எம் தாயகம்!" என்ற விடுதலைக் கீதத்துடன் புரட்சியியக்கத்தினர் சுடப்பட்டனர், இரத்தம் வழிந்தது, ஆனால் புரட்சிக்கனல் தணியவில்லை.

மேலை நாடுகள் கண்டு மலைக்குமளவு, ஜப்பான் எல்லாத் துறைகளிலும் முன்னேறிவந்தது. அதன் தொழில் வளர்ச்சியும், உற்பத்தி முறையும் ஐரோப்பிய நாடுகளை போட்டிக்கழைத்தன. ஜப்பானின் வளர்ச்சி வெள்ளை ஏகாதி

பத்தியங்களுக்கு கிலியூட்டியது, ஆனால் அது மற்ற ஆசிய நாடுகளுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின்கீழ் அவதிப்பட்ட இந்தோ-சீனாவுக்கு, ஜப்பான் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியது. தமது நாட்டு விடுதலைக்கு ஜப்பானின் உதவி கிடைக்குமென்று இந்தோ-சீனா விடுதலை இயக்கத்தினர் நம்பினர். ஆனால் படைபலம் பெருகிய நிலையில், ஜப்பான் போர்தொடுத்தது, ஆசியா நாடுகளை அடிமைப்படுத்தும் ஏகாதிபத்திய நாடுகளின் மீதல்ல, ஆசியா நாடுகளில் மிகப் பெரிதான சீனாமீது! ஜப்பான் வெள்ளை ஏகாதிபத்தியங்களுடன் போட்டிபோட்டு, தானும் ஒரு ஏகாதிபத்தியம் ஆக முயன்றது. 1937-ல் மூண்ட ஜப்பான்-சீனா சண்டை, இந்தோ-சீனா விடுதலை இயக்கத்தினர் சிலருக்கு இருந்த மனமயக்கத்தைப் போக்கியது ஜப்பானிலிருந்து உதவி வரும் என்ற எண்ணம்போய், ஆசியாவின் கிழக்கு நாடுகளுக்கு ஜப்பானால் புதியதொரு ஆபத்துச் சூழவிருக்கிறது என்பது புலனாயிற்று.

விடுதலை இயக்கம்

1939-ல் இரண்டாவது உலகப்போர் மூண்டபொழுது இந்தோ-சீனா விடுதலை இயக்கத்தினரில் முக்கியமானவர்களெல்லாம் கைது செய்யப்பட்டனர். பலர் தப்பி, மறைந்தும், வெளிநாடு சென்றும் வாழ்ந்தனர். விடுதலை இயக்கங்கள் சட்டவிரோத அமைப்புகளாக்கப்பட்டன. ஐரோப்பிய களத்தில், ஜெர்மன் நாசிப் படைகளுடன் கடுமையான போரை பிரான்ஸ் நடத்திக்கொண்டிருந்தது. அங்கு பக்கத்து நாட்டுக்கு பிரான்ஸ் அடிமைப்படக்கூடாது என்பதற்காக தனது முழுபலத்தையும் முன் வைத்து பிரெஞ்சு அரசாங்கம் போராடி வந்தது. ஆனால் அதே சமயத்தில், இந்தோ-சீனாவின் விடுதலை இயக்கத்தைச் சிதைத் விடுவதில் கண்ணும் கருத்துமாயிருந்தது.

1940-ல் பாரிஸ் நகரம் விழுந்தது; ஹிட்லர் படைமுன் பிரெஞ்சு அரசாங்கம் அடிபணிந்தது. இந்தோ-சீனாவில் பிரெஞ்சுப் பிரதிநிதியாக இருந்த டிகோ என்பவர், ஜப்பானுடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி ஜப்பானிய படைகள் இந்தோ-சீனாவில் தங்க அனுமதிக்கப்பட்டது. அதாவது இந்தோ-சீனா ஜப்பானுடைய ஆதிபத்தியத்துக்கு அடிமைப்



இந்தோ-சீனாவின் நிலப்படம். அதிலுள்ள வியட்நாம், லயாஸ், கம்போடியா பகுதிகளும், எல்லையோரத்திலுள்ள நாடுகளும் காட்டப்பட்டுள்ளன.

படுத்தப்பட்டது. வியட்நாம் வடக்குப் பகுதியில் ஜப்பானிய படைகள் வந்து குவிந்தன.

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தால் இந்தோ-சீனாவைப் பாதுகாக்க முடியாது என்பது தெரிந்ததும், இந்தோ-சீனாவுக்கு விடுதலை தந்திருக்கலாம், ஆனால் அப்படிச் செய்யவில்லை. மற்றொரு ஏகாதிபத்தியத்திடம் ஒப்படைத்துவிட்டது!

இந்தோ-சீனாமீது, ஜப்பான், பிரெஞ்சு இரண்டு நாட்டு, அதிகாரிகளும் ஆட்சி செலுத்தினார்கள். முன்பு ஒரு முதலாளி இருந்தது போய், இப்பொழுது இரண்டு முதலாளிகள் வந்துவிட்டனர். எனவே விடுதலை இயக்கத்தினரின் வேலை இரண்டுமடங்கானது. பிரெஞ்சு அதிகாரமே ஆட்சி நடத்தி வந்தது. ஆனால் ஜப்பான் ராணுவ அதிகாரிகள் மேற்பார்வை பார்த்துவந்தனர். நாட்டு வருமானத்தில், இப்பொழுது இரண்டுபேரும் பங்குபோட்டு எடுத்துக்கொண்டனர். அதனால் வரிச்சுமை அதிகரித்ததுடன், நாட்டின் வளமும் குறையத் தொடங்கியது. விளைபொருள்களெல்லாம் கண்

மூடித்தனமான முறையில் ஜப்பானியராலும், பிரெஞ்சுக்காரர்களாலும் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால் அதற்குப் பதில் தேவையான பொருள்கள் இறக்குமதியோ, உற்பத்தியோ, செய்யப்படவில்லை. எனவே நாட்டு மக்களிடம் தரப்பட்ட அபரிமிதமான நோட்டுகளுக்கு மதிப்பில்லாமற் போய்விட்டது. நோட்டுகளின் மதிப்பு குறைந்ததும் விலைவாசிகள் ஏறின. ஏழை மக்களின் வாழ்வு சோகமயமானது.

இந்தச் சமயத்தில், மக்கள் படும் அவதியை நீக்கவும், விடுதலை உரிமையை வாங்கித்தரவும், வியட்நாம் சுதந்தரக் கட்சியொன்று அமைக்கப்பட்டது, அதுவே வியட் மின் என்று அழைக்கப்படுவதாகும்.

வியட்மின் கட்சி, ஜப்பானியருக்கு எதிராக நாடெங்கும் எதிர்ப்புக் கிளைகளை உண்டாக்கியது. கொரில்லாப் போர்முறை வளர்ந்து, ஜப்பானியரின் யுத்த வேலைகள் முடிந்த அளவுக்கு நாசமாக்கப்பட்டன. வரவர மக்களிடை வியட்மின் குழுவினருக்கு ஆதரவு கிடைத்தது. நாட்டில் எல்லாப் பகுதியிலும், அந்தக் குழுவினர் மறைந்திருந்து வேலை செய்தனர். இயக்கம் வலுப்பெறும் நிலையில், வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த பல தலைவர்கள் ரகசியமாக வந்து சேர்ந்தனர். டாக்டர் ஹோ சி மின் திரும்பி வந்து, வியட்மின் இயக்கத்துக்குத் தலைவரானார்.

1945 மார்ச் மாதத்தில் நேசப்படைகள் பிரான்ஸ் கடற்கரையில் வந்திறங்கிப் போராடிய பின், ஹிட்லருக்குச் சாதகமாக இருந்த விச்சி அரசாங்கம் விழுந்தது, ஆனால் அப்பொழுது கூட, இந்தோ-சீனாவில் பிரெஞ்சு அதிகாரிகள் விடுதலை இயக்கத்துக்கு உதவிசெய்யவில்லை. மாறாக ஜப்பானுடன் சேர்ந்துகொண்டனர் ஐரோப்பாவில் நேசப்படைகள் வலுப்பெறுகின்றன என்று கேள்விப்பட்டதுமே, ஜப்பான் இந்தோ-சீனாவை தனது நேரடி ஆட்சிக்குள் கொண்டுவந்தது. இதற்கு பிரெஞ்சு அதிகாரிகளிடமிருந்து சிறிது எதிர்ப்பும் வரவில்லை. ஜப்பானியரிடம் அரசாங்கத்தை ஒப்புவித்துவிட்டு, பேசாமலிருந்துவிட்டனர்.

ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஜப்பானியர்கள், பாவ் டாய் மன்னர் தலைமையில் ஒரு அரசாங்கத்தை உண்டாக்கினர். ஜப்பானியருக்கு ஆதரவாக பாவ் டாய் மன்னரும் இருந்தார். கொரில்லாப்படைகளைக் கண்டுபிடிப்பதும், வியட்மின் இயக்கத்தினரைத் தண்டிப்பதும், ஜப்பானுக்கு எழும் எதிர்ப்புகளை அடக்குவதும் புதிய அரசாங்கத்தின் முக்கிய வேலையாயின.

குடியரசு தோற்றம்

ஜப்பானிய ஆட்சிமுறை வெகுநாளைக்கு நீடிக்கவில்லை. 1945 ஆகஸ்டில் எதிர்ப் படைகளின் தாக்குதலையும், அணுக்குண்டு வீச்சுகளையும் தாங்கமுடியாமல், ஜப்பான் அடிபணிந்தது. அந்தச் செய்தி வந்த இரண்டாவது நாளே, இந்தோ-சீனா பூராவும் கலகமும் கொந்தளிப்பும் தோன்றின. காடுகளில் பதுங்கியிருந்த வியட்மின் கொரில்லாப் படைகள் வெளியே வந்தன; ஹனாய் தலைநகர் நோக்கிப் படையெடுத்துச் சென்றன. எதிர்ப்பு அதிகமின்றி, அதைக் கைப்பற்றி, அரசாங்கத்தை யாற்றி அமைத்தன.

1945 ஆகஸ்ட் 25-ந் தேதி டாக்டர் ஹோ சி-மின் தலைமையில் வியட்நாம் குடியரசு அரசாங்கம் அமைக்கப்பட்டது.

ஜப்பானியரால் உண்டாக்கப்பட்ட பொம்மை அரசாங்கம் கவிழ்ந்தது, அதற்குத் தலைவராகயிருந்த பாவ் டாய் மன்னர் முடிதுறந்து நாட்டைவிட்டோடினார்.

டாக்டர் ஹோ சி மின் தலைமையில் வடக்கில் ஹனாய் நகரில் வியட்நாம் குடியரசு தோன்றியதும்போல, தெற்கே கொச்சின்-சீனாவில் டிரான் வான் கியாவ் என்பவர் தலைமையில் கொச்சின்-சீனா குடியரசு, சைகோனைத் தலைநகரமாகக்கொண்டு நிறுவப்பட்டது.

உருவாகிய புதிய குடியரசுகள் அமைதியாக வேலைசெய்ய விடப்படவில்லை. பிரெஞ்சு அதிகாரிகளின் எதிர்ப்பு இருந்துவந்தது. மேலும், ஜப்பானிய ஆயுதங்களைக் கைப்பற்றி சமாதானத் திட்டத்தை நிறைவேற்ற வந்த பிரிட்டிஷ் படைகளும் புதிய குடியரசை சந்தேகக் கண்ணோடேயே பார்த்தனர்.

ஏகாதிபத்தியங்களின் தலையீடு

கொச்சின்-சீனாவின் தலைநகரமான சைகோன் நகரில் ஜப்பான் சமாதானத் திட்டத்தைப் பரிபாலிக்கப் பிரிட்டிஷ் படை தங்கியிருந்தது. படைவந்த ஒரு வாரத்துக்குள், படைத்தலைவ

றின் எதேச்சாதிகார ஆட்சிமுறை ஆரம்பித்தது. நாட்டுமக்கள் ஆயுதங்கள் வைத்திருப்பது நான்கு பேருக்குமேல் கூடுவது, ஊர்வலம் வருவது முதலியன தடுக்கப்பட்டன. தாய்மொழிப் பத்திரிக்கைகளில் வெளியிடப்படும் செய்திகள் முதலில் தணிக்கை செய்யப்பட்டன. ஆனால் இவ்வளவு தடைகளும் வியட்நாம் மக்களுக்கு மட்டுமே அமுலாக்கப்பட்டது. பிரெஞ்சுக்காரர்கள் ஆயுதங்கள் வைத்திருப்பதை யாரும் தடை செய்யவில்லை.

கடுமையான தடை உத்தரவுகள் வந்த மறுவாரமே, சைகோன் நகரில் ஊரடங்குச் சட்டம்—அதாவது இருட்டியதும் நகர வீதியில் எந்த நடமாட்டமும் கூடாது என்ற உத்தரவு—பிறப்பிக்கப்பட்டது. இந்த உத்தரவு வந்த மூன்றாவது நாள் காலை, பிரெஞ்சுத் துருப்புகள் சைகோனிலிருந்த குடியரசு அரசாங்கக் கட்டிடத்தைத் தாக்கியது. வியட்நாம் படைவீரர்கள் வளைத்துக்கொள்ளப்பட்டனர். தெருக்களில் வழியில் தடுப்புகள் போட்டு, நகரமக்கள் சோதனையிடப்பட்டனர். வியட்நாம் குடியரசுக்கு ஆதரவாக இருந்தவர்கள் இழுத்துவரப்பட்டுச், சிறையில் தள்ளப்பட்டனர். நகர் முழுவதும் பிரெஞ்சுத் துருப்புகள் சுற்றிவந்தது. கொச்சின்-சீனா குடியரசு வீழ்ந்தது. அதன் தலைவர்கள் காடுகளுக்குள் தப்பியோடி, கொரில்லாப் படைகளுடன் சேர்ந்துகொண்டனர்.

ஐரோப்பாவிலிருந்த துருப்புகளைப் பிரெஞ்சு அரசாங்கம் இந்தோ-சீனா பக்கம் திருப்பியது. சைகோன் நகரில் பிரெஞ்சுத் துருப்புகள் வந்து குவிந்தவண்ணமிருந்தன. சற்று வலுத்த பின், பிரெஞ்சுத்துருப்புகள் சைகோனிலிருந்து வெளியேறி, உள்நாட்டிலும் பரவி, வியட்நாம் படைகளுடன் போரிட்டன. நேரிடையான பெரும் சண்டைகள் எதுவும் நிகழாவிட்டாலும், கொரில்லாச் சண்டைகள் ஏராளமாக நடைபெற்றன. காடுகளிலும், நாட்டுப்புரங்களிலும், மலை இடுக்குகளிலும் வியட்நாம் படைகள் மறைந்துகொண்டன. முக்கியமான நகரங்களில் பிரெஞ்சுத் துருப்புகள் தங்கிக்கொண்டன. தென்பகுதியில், வியட்நாம் கொரில்லாப் போர்முறையைக் கையாண்டு, ஆங்காங்கு சிதறிக்கிடக்கின்றன. வடக்கில் பட்டும் டாக்டர் ஹோ சி மின் தலைமையில் இருந்த படைகள், சிவப்பு நதிதீரத்தைக் காத்துக்கொண்டன. வியட்நாம் குடியரசு அந்தப் பகுதியில் மட்டும் நிலைத்திருக்க முடிந்தது. இப்பொழுதும் பிரெஞ்சு படைகளுக்கும், வியட்நாம் குடியரசு படைகளுக்கும் அந்தப் பகுதியில்தான் பலமான சண்டைகள் நிகழ்கின்றன.

அமெரிக்க உதவி

கடந்த எட்டு ஆண்டுகளாகப் போர் தொடர்ந்து நடந்துகொண்டேயிருக்கிறது. அமெரிக்கா முதலில் அதிகக் கவனம் செலுத்தாதிருந்தபோதிலும், வர வர பிரெஞ்சு ஆதிபத்தியத்துக்கு ஆதரவாக உதவிகளை ஏராளமாக அளித்துவருகிறது. சுருங்கச் சொன்னால், அமெரிக்காவின் உதவி இல்லையேல், பிரெஞ்சு அரசாங்கத்தால் ஒருநாள்கூட மேற்கொண்டு சண்டையை நடத்தமுடியாது. அமெரிக்காவின் டாலர் உதவியே பிரெஞ்சுப் படைகளை இந்தோ-சீனாவில் நடத்திக்கொண்டிருக்கிறது. அமெரிக்கா முன்னின்று உதவி செய்வதால், அதற்கு ஒத்துப்போகும் நாடுகள் பல பிரெஞ்சுப் பக்கமே பேசவேண்டியிருக்கின்றன. வியட்மின் அரசாங்கத்துக்கு உதவியாக செஞ்சீனா, சோவியத் ருஷியா இரண்டும் இருக்கின்றன. எனவே உலக அரங்கத்தில், இந்தோ-சீனா போராட்டத்தைப் பற்றி, இரண்டு பிரிவுகளாக நாடுகள் நிற்கின்றன.

விடுதலை பெற்ற வியட்நாம் பகுதிக்கு டாக்டர் ஹோ சி மின் தலைவராக இருக்கிறார். பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருக்கும் வியட்நாம், லயாஸ், கம்போடியா ஆகியவைகளைச் சேர்ந்து, "இந்தோ-சீனா இணைப்பு நாடுகள்" என்ற பெயரில் பிரெஞ்சுக்காரர்களால் நிர்வாகிக்கப்படுகிறது. அதில் முக்கியமாக விளங்குபவர், பாவ் டாய் மன்னர். எந்த பாவ் டாய் ஜப்பானியர் காலத்தில் அவர்களுக்கு உதவியாயிருந்தாரோ, அந்த மன்னரே இப்பொழுது அமெரிக்க—பிரெஞ்சு அரசியல் நிபுணர்களால் நாட்டுக்கு நல்ல பிள்ளையெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

விடுதலை கண்ட வியட்மின் அரசாங்கத்தை அழிக்க, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தைப் பாதுகாக்க, பாவ் டாய் போன்ற மன்னர் பரம்பரையினருக்கு அபயமளிக்க, தூரக்கிழக்கு நாடுகளில் "அமைதியை" நிலைநாட்ட அமெரிக்கா ஏராளமாக உதவிகள் கடனாகவும், இனமாகவும்—கொடுத்துள்ளது. 1953-ல் ஆண்டு

ஆரம்பத்தில் 40 கோடி டாலர் (அதாவது 188 கோடி ரூபாய்கள்) உதவி தரப்பட்டது. அது போதாதென்று மேற்கொண்டு, 37½ கோடி டாலர் (அதாவது 176 கோடி ரூபாய்) ஒதுக்கியது. மொத்தத்தில் 1953 ஒரு ஆண்டில் மட்டும், அமெரிக்கா 364 கோடி ரூபாய்களை இந்தோ-சீனா சண்டைக்காகப் பிரெஞ்சு அரசாங்கத்துக்குக் கொடுத்துள்ளது! பிரெஞ்சுப் படைகளல்ல, அமெரிக்காவின் டாலர் இந்தோ-சீனாவில் தாக்குதலை நடத்துகிறது; சண்டைக்கான உத்தரவுகளை பாரிஸ் அரசாங்கமல்ல, வாஷிங்டன் யுத்த காரியாலயம் நிர்வாகிக்கிறது!

கோடிக்கணக்கில் டாலரைக் கொட்டிய போதிலும், ஆயிரக்கணக்கில் யுத்ததளவாடங்களை அனுப்பியபோதிலும், இந்தோ-சீனா போராட்டத்தை விரைவில் முடித்து, அமெரிக்காவால் வெற்றிகாண முடியவில்லை. அனுப்பப்படுகிற உதவி அதிகரிக்கும்பொழுது, ஓரிரு இடத்தில் நிலைமை சமாளிக்கப்படலாம். ஆனால் டாலர் கணக்கையும், ஆயுத உதவியை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு நாட்டை வென்றுவிட முடியாது. சண்டை நீடிக்க வழி ஏற்படுகிறதேயன்றி, முழு வெற்றியடைந்து, அமைதியை நிலைநாட்டுவதென்பது முடியாத காரியம். சரிந்து வருகிற சாம்ராஜ்யத்தை, இடிந்து போகிற சுவரை, எவ்வளவு நாளைக்கு முட்டுக்கொடுத்து நிறுத்திவைக்க முடியும்? அடிப்படையிலேயே ஆட்டங்கண்டுவிட்ட பிறகு, மேற்பூச்சுகளோ, பக்கபலமோ, வீழ்ச்சியைத் தடுத்துவிடாது. அதைப்போல, இந்தோ-சீனாவில் பிரெஞ்சு ஏகாதிபத்தியம் சீரழிந்து கிடக்கிறது, நாட்டு மக்களால் நஞ்செனவெறுக்கப்படுகிறது. செல்வாக்கிழந்த அரசுக்கு உதவி செய்யவே அமெரிக்கா வந்திருக்கிறது.

கிழக்கு ஆசியா நாடுகளில் நடைபெற்ற போராட்டங்களிலெல்லாம் அமெரிக்கா ஊழல் மிகுந்த பிற்போக்கு வாதிகளையே எவரெவர் அந்த நாட்டு மக்களால் வெறுத்தொதுக்கப்படுகின்றனரோ அவர்களையே முழுமூச்சுடன் ஆதரிக்கிறது. சீனாவில் சியாங்-கே-ஷேக்கை ஆதரித்தது, கோடிக்கணக்கில் டாலர் உதவி அளித்தது, ஆனால் "சீனாவின் சிங்க"மென அமெரிக்காவால் போற்றப்பட்ட சியாங்-கே-ஷேக் சிறு நரியைப்போல பார்மோசாத் தீவில் ஓடி வாழவேண்டிய நிலை பிறந்தது. அமெரிக்கா செய்த உதவியெல்லாம் விழலுக்கிறைத்த நீராயிற்று.

கொரியாவிலும், மிகப்பிற்போக்கு வாதியெனக் கருதப்பட்ட சிங்மன் ரீயை ஆதரிக்கப்போய், அதனால் பெரும் சண்டையை ஏற்று, பல்லாயிரக்கணக்கான வீரர்களையும், பலகோடி டாலரையும் யுத்தகளத்தில் பலிதரவேண்டியிருந்தது. இன்னும் அமைதி முற்றிலும் ஏற்படவில்லை.

இந்தோ-சீனாவிலும், ஜப்பானியரின் கையாளாக இருந்த பாவ் டாய் மன்னர்களை அமெரிக்கா ஆதரித்து சண்டையை நீட்டித்துவருகிறது.

இவ்வாறு ஆசியா நாடுகளில் தோன்றுகிற விடுதலைப் போராட்டங்களில், தோற்றுப்போகிற கட்சியை மிகக் கவலையுடன் தேர்ந்தெடுத்து, அமெரிக்கா தனது உதவியை அளிக்கிறது.

சமாதானத் திட்டம்

இந்தோ-சீனாவில் சண்டையை நிறுத்தி, ஒரு சமாதானத்தைக் காணவேண்டிய அவசியம், சண்டையிலிருப்பவர்களுக்கும் மற்ற வல்லரசுகளுக்கும் உண்டாகியிருக்கிறது. நிலைமை முற்றினால், மற்றுமொரு கொரிய யுத்தகளம் இந்தோ-சீனாவுக்குள் உண்டாகி, உலக வல்லரசுகளும், வல்லரசுகளைச் சார்ந்த சிறு நாடுகளும் மோதவேண்டிய அவசியமேற்படலாம். அத்தகைய பெரும்போருக்கு எவரும் ஆயத்தமாயில்லை, முடிவு என்னவாகுமோ என்ற கவலையால். எனவேதான், இந்தோ-சீனாவில் அமைதியை உண்டாக்கும் திட்டம் ஜினிவா மாநாட்டில் பேசப்படுகிறது.

ஜினிவாவில் கூடியுள்ள மாநாட்டில், இந்தோ-சீனா போரை உடனடியாக நிறுத்திவிடுவதற்கானப் பேச்சுகள் நடைபெறுகின்றன. போர் நிறுத்தம், நிலையான சமாதானத் திட்டத்துக்கு வழியமைக்கலாம், அல்லது சிறிது ஓய்வு கொடுத்து, பின்பு பெருத்த அளவில் மீண்டும் சண்டையைத் துவக்க ஒரு வழியாக அமையலாம். அது வல்லரசுகளின் போக்கைப் பொறுத்திருக்கிறது.

இந்தோ-சீனாவில் எழுந்துள்ள போராட்டம், பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து எழுந்ததாம். எனவே, ஏகாதிபத்தியம் அந்த நாட்டைவிட்டு அகலுகிறவரை—அல்லது அகற்றப்படுகிறவரை நிலையான அமைதி அங்கு ஏற்படுமென்று கூறமுடியாது.

குன்றக்குடியாருக்குக் 'காணிக்கை!'-3

[இரா. நெ.]

குன்றக்குடியார் சமய வாழ்வு பற்றிப் பேசும் போது, "எம்மதமும் சம்மதம்" என்ற 'பரந்த' நோக்கத்தின் அடிப்படையில் நின்று பேசுகிறாரா? அல்லது "சைவ சமயமே சாலச் சிறந்தது" என்று செப்புகிறாரா? என்பது விளக்கமாகத் தெரியவில்லை!

"எம்மதமும் சம்மதம்" என்று கூறுகிறாரென்றால், எல்லாச் சமயங்களும் கொண்டிருக்கிற வேதம், சாஸ்திரம், சம்பிரதாயம், ஆகமம், புராணம், இதிகாசம் ஆகியவை கூறுகின்ற கொள்கைகள், சட்டதிட்டங்கள், நெறிமுறைகள், பழக்கவழக்கங்கள், ஒழுக்கங்கள் ஆகியவற்றை ஏற்றுக்கொள்ள அல்லது ஒப்புக்கொள்ள அடிகளார் இசைகிறார் என்று பொருள். இல்லை, "சைவ சமயமே சாலச் சிறந்தது" என்று கூறுகிறாரென்றால், சைவ சமயத்தோடு மாறுபடுகிற, பிற சமய பழக்க வழக்கங்களையும், சடங்குகளையும், நெறிமுறைகளையும் அவர் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார் என்று கொள்ளவேண்டும். இந்த நிலையில் எந்தச் சமயவாழ்வை—எப்படிப்பட்ட சமய வாழ்வைச் சமயவாழ்வு என்று அடிகளார் ஏற்றுக்கொள்ளச் சொல்லுகிறாரோ? தெரியவில்லை!

பன்றிக்கறியை வெறுத்துப் பசுமாட்டுக்கறியைச் சாப்பிடும் முஸ்லீம்களின் சமய வாழ்வு சரியா? அல்லது பசுமாட்டுக்கறியை வெறுத்துப் பன்றிக்கறியைச் சாப்பிடும் கண்ணப்ப நாயனார் பரம்பரையின் சமயவாழ்வு சரியா? இந்துக்களிலேயே காய்கறி படைத்துக் கண்ணபிரானை வணங்கும் சமயவாழ்வு சரியா? அல்லது கள்ளு சாராயம் படைத்துக் கடாவெட்டிக் காத்தவராயன் சாமியை வணங்கும் சமய வாழ்வு சரியா? 'ஆண்டவன்' சிலையை அய்யர் மட்டுமேதான் தொடவேண்டும் அடிகளாரும் தொடமுடியாது என்ற இந்துக்களின் சமய வாழ்வு சரியா? அல்லது 'ஆண்டவன்' முன் அனைவரும் ஒன்று என்று கூடும் இஸ்லாமியரின் சமயவாழ்வு சரியா? முகத்தைச் சிரைத்துத் தலையிலே உச்சிக்குடுமி வைக்கும் சமய வாழ்வு சரியா? அல்லது தலையைச் சிரைத்து முகத்திலே தாடிவைக்கும் சமயவாழ்வு சரியா? பெண்களுக்குச் சொத்துரிமை கொடுக்கும் சமயவாழ்வு சரியா? அல்லது பெண்களுக்குச் சொத்துரிமை மறுக்கும் சமயவாழ்வு சரியா? விதவைத் திருமணத்தை ஏற்றுக்கொள்ளும் சமயவாழ்வு சரியா? அல்லது விதவைத் திருமணத்தை அறவே வெறுக்கும் சமயவாழ்வு சரியா! 'ஆண்டவனை' ஐந்து வேளை தொழுவதா? அல்லது ஆறுகால பூசை நடத்தி ஆறு வேளை தொழுவதா? அல்லது வாரத்திற்கு ஒரு முறை தொழுவதா? இவற்றிலே எந்தச் சமய வாழ்வு சரியானது? திருமண விலக்கு அளிக்கும் சமயவாழ்வு சரியா? அல்லது திருமண விலக்கை அறவே ஒப்புக்கொள்ளாத சமய வாழ்வு சரியா? திருநீறு பூசி உருத்திராக்கம் போடுவதா? அல்லது திருநாமம் தீட்டித் துளசிமணிமாலை அணிவதா? அல்லது வெறும் நெற்றியோடு இருந்து சிலுவையைக் கழுத்திலே மாட்டிக்கொள்வதா? அல்லது வெறும் நெற்றியோடு இருந்து பிறையைத் தொப்பியிலே வைத்துக்கொள்வதா? இவற்றில் எந்தச் சமயவாழ்வு சரியானது? காதல் கலப்புமண வாழ்வுக்கு இடமளிக்கும் சமயவாழ்வு சரியா? அல்லது ஒரே வகுப்பில் கன்னிகாதானம் செய்யும் வழக்கமே சரி என்னும் சமயவாழ்வு சரியா? இந்துக்கள்—முஸ்லீம்கள்—கிருத்தவர்கள்—பார்சிகள்—சீக்கியர்கள் — பௌத்தர்கள்—சமணர்கள் போன்ற இவர்களில் யார்

நடத்தும் சமயவாழ்வு சரியானது? இந்துக்களிலேயே அய்யர்—அய்யங்கார்—சாஸ்திரி—சர்மா—முதலியார்—செட்டியார்—நாயக்கர்—படையாச்சி—கள்ளர்—மறவர் — அகம்படியர்—கோனார்—நாடார்—பள்ளர்—பறையர்—சக்கிலியர் போன்ற இவர்களில் யார் நடத்தும் சமய வாழ்வு சரியானது? குன்றக்குடியார் இவைகளில் எவற்றைச் சமயவாழ்வுக்கு உடன்பாடுடையன என்று ஒப்புக்கொள்கிறார்?—எவற்றைப் புறம்பானவை என்று ஒதுக்குகிறார்? முரண்பட்ட கொள்கைகளையும், பழக்க வழக்கங்களையும், புறத்தோற்றங்களையும் கொண்ட பல்வேறு சமயங்களும், பல்வேறு வழிகளில், ஒரே 'ஆண்டவனைச்' சென்'றடைவதால்', எந்தச் சமய வாழ்வை ஏற்றாலும் தவறில்லை என்ற 'சமாதானத்தைக்' குன்றக்குடியார் நீட்ட முனைவாரேல், புறத்தோற்றத்தில், கொள்கையில், பழக்க வழக்கத்தில் சிலவற்றில் சில சமயங்களோடு ஒத்தும், சிலவற்றில் சில சமயங்களோடு வேறுபட்டும், சிலவற்றில் சில சமயங்களோடு முரண்பட்டும் விளங்கும் பகுத்தறிவு நெறி மட்டும் அந்த 'ஆண்டவனைச்' சேராது என்பதற்குச் சமயமெய்யன்பர்கள் கண்டறிந்து காட்டும் உண்மை என்ன?

சமயவாழ்வு என்று குறிப்பிடும்போது, அடிகளார் புறத்தோற்றத்தைக் குறிப்பிடுகிறாரா? அல்லது அகத்தோற்றத்தைக் குறிப்பிடுகிறாரா? புறத்தோற்றத்தைக் குறிப்பிடுகிறார் என்றால், மேலே சுட்டிக்காட்டியவற்றுள் எந்தப் புறத்தோற்றத்தைச் சாலச்சிறந்தது என்கிறார்?—எந்தச் சமயநெறியை ஆண்டவனை அடைவதற்குச் சிறந்த ஒரே குறுக்குவழி என்கிறார்? இவ்வுலகிலிருந்து 'ஆண்டவனை' அடைய பல சமயங்களும் வகுக்கும் பல வழிகளும் இருக்கின்றன என்றால், அவற்றில் ஏதாவது ஒன்று தானே சிறந்த வழியாக இருக்கமுடியும்? ஏதாவது ஒன்றுதான் என்றால், அந்த ஒன்று என்ன? எல்லா வழிகளுமே சிறந்த வழிகள் தாம் என்ற 'பரந்த' நோக்கில் கூறினால், எந்த நெறியை யார் பின்பற்றினால்தான் என்ன? பின் சைவ சமயத்திற்கும், உருவவழிபாட்டிற்கும் குன்றக்குடியார் முனைந்து பாடுபடுவானேன்? சைவம் வளர்ந்தால்தான் என்ன? பிற சமயங்களாக மாறினால்தான் என்ன?

சமயவாழ்வு என்று குறிப்பிடும்போது, அடிகளார், புறத்தோற்றத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை, அன்பு—அருள்—அறம்—நீதி—நேர்மை—ஈவு—இரக்கம் ஆகியவற்றை ஏற்றல், கொலை களவு—காமம்—கள்—கவர் ஆகியவற்றிலே விருப்பம் செலுத்தாதிருத்தல்—நல்லனவேட்டல்—தீயனகடிதல்—இன்பஞ்சூழல்—துன்பம் நீக்கல் போன்ற அகத்தோற்றமுடையாரையே சமயவாழ்வுடையாராகக் கொள்ளுகிறார் என்றால், இப்படிப்பட்ட 'சமயவாழ்வு'டையாரைப் பகுத்தறிவு நெறியினரிலேயும் காட்ட முடியுமே! அதே நிலையில், இப்படிப்பட்ட 'சமய வாழ்வு' அற்றவரைச் சமயங்களைச் சார்ந்தோரிலேயும் காட்ட முடியுமே! மேலே குறிப்பிட்டுக் காட்டியுள்ள அகத்தோற்றங்களை உலகில் உள்ள எந்தச் சமயமும் வெறுப்பதாகவோ—ஏற்றுக் கொள்ள மறுப்பதாகவோ சொல்ல முடியாது. அதுபோலவே அவ்வகத்தோற்றங்களைப் பகுத்தறிவு நெறியும் வெறுப்பதில்லை—ஏற்றுக் கொள்ள மறுப்பதில்லை என்பதைக் குன்றக்குடியார் உணரவேண்டும்.

சமயங்கள் புகன்றிடும் அகத்தோற்றங்கள் முக்கியமா?—அல்லது புறத்தோற்றங்கள் முக்கியமா? அகத்தோற்றங்களிடையே மதிப்பு வைக்கவேண்டியது இன்றியமையாததா அல்லது புறத்தோற்றங்களிடையே மதிப்பு வைக்க வேண்டியது இன்றியமையாததா? உலகப் பேரறிஞர்கள்—சமயத் தலைவர்கள் அத்துணைப் பேர்களுடைய கூற்றுக்களையெல்லாம் ஆய்ந்து பார்த்தால், முடிந்த முடிவில், "புறத்தோற்றத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்; அகத்தோற்றத்தைப்பற்றியே கவலைப்படுவீர்!" என்று பகரும் பறைசாற்றலைத்தான் கேட்கிறோம். 'சமயம்' கூறும் புறப்பண்புகளையும்—நடவடிக்கைகளையும் பொறுத்து, அகப்பண்புகள் அமைந்துவிடவில்லை, சமய நடவடிக்கைகளைப் புறக்கணிப்பவரிடத்தும் நற்பண்புகள் இலங்கவே செய்கின்றன என்பது முன்னரே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில் நற்பண்புகளை நிலைநாட்டும் ஆற்றல் சமயத்திற்கே(!?) உண்டு என்று அடிகளார் கூறுவது எவ்வளவு வியப்புக்குரியதாக இருக்கிறது!

'ஆண்டவனை'ப் பற்றியும், 'அவனு'க்கும் உலகத்திற்கும்—'அவனு'க்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பைப்பற்றியும் கொள்ளப்படும் கருத்துக்களும், அவைபற்றிய வேறுபாடுகளும் ஒருபக்கம் இருக்கட்டும்; உலகிலுள்ள சமயத்தார்களெல்லாம் அகப் பண்புகளைக் கொண்டு

பிரிக்கப்படுகிறார்களா அல்லது புறப்பண்புகளைக் கொண்டு பிரிக்கப்படுகிறார்களா? என்று பார்த்தால், 'அளவிடும் கருவி' புறப்பண்பேயொழிய, அகப்பண்பு அல்ல என்பது தெளிவுபடும். மனித வாழ்வில், ஒரு சமயத்தினின்றும் வேறோர் சமயத்தைப் பிரித்துக்காட்டுவன, புற ஒழுக்கங்களேயாகும். குன்றக்குடியார் சைவ மடத்தின் தலைவராக இருந்து; காவியுடை யணிந்து, திருநீறு பூசி, சைவ சாஸ்திர புராண ஆகமங்களை மிகவாகப் போற்றி, 'சமயவாழ்வு' பற்றிப் பேசுகிறார் என்றால், திருநீறு பூசுதல்—கோவிலுக்குச் செல்லுதல்—கூட்டு வழிபாடு கொள்ளுதல்—தேவாரம் திருவாசகம் ஓதுதல்—ஆண்டவர்க்கு உருவச்சிலைகள் அமைத்தல்—ஆகம விதிப்படி நடத்தல்—தேர் திருவிழாக்கள் கொண்டாடுதல்—பஜனை செய்தல் போன்ற நடவடிக்கைகள் மலரவேண்டும், மலர்ந்தால் 'நற்பண்புகள்' குடியேறும் என்று எண்ணுகிறார், என்பது அறிந்துகொள்ள வேண்டுவதாகிறது. அவர் தலைவராயிருக்கும் அருள்நெறித் திருக்கூட்டம் இத்தகைய நடவடிக்கைகளை வற்புறுத்திவருவதைத்தான் ஆங்காங்கு பார்க்கிறோம். இத்தகைய சமயவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளாதவர்கள் எந்த வகையிலே கெட்டுப்போய்விட்டார்கள்?—கையாளுபவர்கள் எந்த வகையிலே முன்னேறிவிட்டார்கள்? என்பதை அறிய விரும்புகிறோம்! 'சமயத்திற்கே' ஆற்றல் உண்டு என்று செப்பிய குன்றக்குடியார் என்ன தெளிவு பயப்பார்?

அடிகளார் சமயப் புறவொழுக்கமான உருவ வழிபாட்டிற்கு முக்கியத்துவம் அளிப்பதிலே முனைந்து நிற்கிறார்; உருவ வழிபாடு உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாததொன்று. என்னும் கருத்துப்பட ஆங்காங்கு பேசிவருகிறார். சமய நெறி வாழ்வோர் அனைவர்க்குமே உருவ வழிபாடு உடன்பாடுடைய ஒன்று, என்று பார்த்தால், பலர்க்கு இல்லை என்பதே தெளிவாகும்.

'ஆண்டவனை' நினைக்கவும், 'அவனை' வழிபடவும், 'அவனிடம்' வரம் கேட்கவும், 'அவன்' அருளைப் பெறவும், 'அவனோடு' இரண்டறக் கலக்கவும், 'அவனை'ச் சிலைவடிவிலே வடித்து, 'அதன்' மூலம் முயன்றால்தான், எளிதில் இயலும், 'இறைவனைச்' சிலையின் மூலம்தான் காண முடியும் என்றெல்லாம் உருவ வழிபாட்டுச் சமயத்தவர்கள் கூறுகிறார்கள். சைவம், வைணவம், வைதீகம், கத்தோலிக்கக் கிருத்தவம் ஆகிய சமயங்களைச் சார்ந்தோர் உருவ வழிபாட்டில் மாறா நம்பிக்கைகொண்டிருக்கின்றனர். சமண சமயம், புத்த சமயம் ஆகியவை உருவவழிபாட்டை அறவே ஒழிக்கின்ற கோட்பாட்டைக் கொண்டிருந்தபோதிலும், அச்சமயங்களைச் சார்ந்தோர், அச்சமயங்கள் உருவாவதற்குக் காரணமாக இருந்த தலைவர்களான மகாவீரர், புத்தர் ஆகியவர்களின் சிலைகளையே வழிபடும் உருவங்களாக வைத்து வணங்கி வருகின்றனர். பிராட்டெஸ்டண்டு கிருத்தவம், இஸ்லாம் போன்ற சமயங்களைச் சார்ந்தோர் உருவ வழிபாட்டை அறவே வெறுத்து, ஒதுக்கிவிட்டுச் சமயவாழ்வு நடத்திவருகிறார்கள். இருசாராரும் குன்றக்குடியாரின் கருத்துப்படி சமயவாழ்வு நடத்துவோர்தாம். உருவ வழிபாட்டை ஏற்றுக்கொள்ளாமலேயே, சிலைகளை 'ஆண்டவன்' குடியேறும் 'தனி இடங்களாகக்' கொள்ளாமலேயே உலகில் பலகோடிப் பேர் வாழ்கிறார்கள். உருவவழிபாடு நடத்துவோரின் வாழ்வைக் காட்டிலும், உருவவழிபாட்டை உதறித்தள்ளிவிட்டவர்களின் வாழ்வு எந்த வகையிலே கேடுற்று காணப்படுகிறது? உருவவழிபாடு செய்யும் சமயத்தவர் நிறைந்த நாட்டில் காணப்படும் வளம், வசதி, கல்வி, கேள்வி, செல்வம், செழிப்பு ஆகியவைகள் உருவ வழிபாட்டை ஒதுக்கியவர் நாட்டில் எந்த வகையில் இல்லாமற் போய்விட்டது? உருவ வழிபாட்டைக் கொண்டிருக்கிறார்கள் என்ற தனித்தன்மைக்காக, அப்படிப்பட்ட மக்களுக்கோ, அல்லது அப்படிப்பட்ட நாட்டிற்கோ 'ஆண்டவன்' என்ன தனிச்சலுகை அளித்துவிட்டான்? ஒரு நாட்டார் உருவ வழிபாட்டைக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு நோய் நொடிகள் இல்லாமற் செய்துவிட்டானா? அல்லது உருவ வழிபாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்காக வேறோர் நாட்டிற்கு நோய்நொடிகளை மிகவாகக் கொடுத்துவிட்டானா? உருவ வழிபாட்டின் மூலம் 'ஆண்டவனை' அறிந்தவர்களின் கண்களுக்குத்தான் 'மோட்ச, உலகின் வழி எளிதில் தெரியும்; உருவ வழிபாட்டை உதறியவர்களுக்கு அவ்வளவு எளிதில் 'மோட்ச' உலகின் வழி அகப்படுவதில்லை என்பதைச சமயவாழ்வு வாழ்வோர் அனைவரும் ஒப்புக்கொள்கிறார்களா? உருவவழிபாட்டுக்காரர்கள் இவ்வுலகிலோ அல்லது 'மறுஉலகிலோ' பெற்ற வாழ்க்கையினை

அந்தக் காலமும் இந்தக் காலமும்

[தமிழாக்கம் : இரா. நெடுஞ்செழியன்]

மத நம்பிக்கை மிகுந்திருந்த மிகப் பழங் காலத்தில், இந்த உலகமானது தட்டை வடிவினது என்றும், ஏறத்தாழ ஒரு தட்டுப்போன்றது என்றும், அதற்குச் சற்றுமேல் ஜெஹோவாவின் வீடு இருந்தது என்றும், அதற்குச் சற்று கீழே சாத்தான் வாழ்ந்தான் என்றும் நம்பப்பட்டு வந்தன! கடவுளும் அவரைச் சேர்ந்த தேவதைகளும் மூன்றாவது தட்டில் வாழ்ந்தார்கள் என்றும், சாத்தானும் பிசாசுகளும் அடித்தட்டில் வாழ்ந்தார்கள் என்றும், மக்கட் சமுதாயம் இரண்டாவது தட்டில் வாழ்ந்தது என்றும் கருதப்பட்டு வந்தன!

அப்பொழுது, அவர்கள், எங்கே மேல் உலகம் இருந்தது என்பதை அறிந்திருந்தார்கள்! அவர்கள் மேலுலகத்திலிருந்து எழுப்பப்பட்ட வீணையின் ஒலியையும், பாட்டின் இசையையும் கேட்டறிந்தார்கள்! அவர்கள் எங்கே நரகம் இருந்தது என்பதை அறிந்தனர்; அங்கே எழுப்பப்படும் வேதனைக் குரல்களைக் கேட்டனர்; நெருப்பிலிருந்து எழும்பிய கந்தகப்புகைகளை நுகர்ந்தனர்! அவர்கள் எரிமலைகளை நரகத்திலிருந்து வெளிப்படும் புகைபோக்கி என்று கருதினர்! அவர்கள் வானுலகத்தோடும், பூவுலகத்தோடும், நரக உலகத்தோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர்! அவர்கள், தங்கத்தெருக்களையும், முத்து வாயில்களையும் கொண்டிருந்த புதிய ஜெருஸலம் நகரோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தனர்!

அந்தக் காலங்களில், ஈனக்கின் மாற்றம் அறிவுக்கு ஒத்ததாகவே கொள்ளப்பட்டது; பெருவெள்ளம் ஏற்படுவதற்கு முன்பு, கடவுளின் பிள்ளைகள் பூவுலகத்திற்கு வந்து, மனிதர்களின் பெண்களோடு காதல் புரிந்தார்கள் என்பதைப் பற்றி யாரும் ஐயப்பாடு கொண்டதில்லை! வானுலகை எட்டிப்பிடிக்கப், பேபல் கோபுரம் கட்டத் தொடங்கியபோது, கடவுள் வந்து, அவர்களுடைய மொழிகள், அவர்களில் ஒருவர்க்கொருவர் புரியாத வண்ணம் செய்த காரணத்தினால்தான் அதனைக் கட்டி முடிக்க முடியாமற்போயிற்றே யொழிய, இல்லையானால், அதனைக் கட்டத்தொடங்கியவர்கள், கட்டியே முடித்திருப்பார்கள் என்றே, மதவாதிகள் நம்பினர்!

ஆண்டவனின் அருள் பாலிக்கப்பட்டதாகக் கருதப்படுகிற அந்த நாட்களில், மதபோதகர்கள் மோட்ச உலகத்தைப் பற்றியும், நரக உலகத்தைப் பற்றியும் எல்லாம் அறிந்திருந்தார்கள்! கடவுள், ஆசையினாலும் அச்சத்தாலும், வாக்குறுதியினாலும் அச்சுறுத்தலாலும், வரமளிப்பதாலும் தண்டனை கொடுப்பதாலும் இவ்வுலகை ஆண்டுவந்தார் என்று, அவர்கள் அறிந்திருந்தனர்! கடவுள் அளிக்கும் வரம் எல்லையற்ற காலத்தது; அதுபோலவேதான் அவர் கொடுக்கும் தண்டனையும்! சரியையும் தவற்றையும் கண்டறிந்துகொள்ளும் அளவுக்கு, மனிதனுடைய மூளையை வளர்க்கவேண்

லாய தனிப்பயன் என்ன? உருவ வழிபாட்டை மிகவாகக் கொண்டிருக்கிற கீழைநாட்டைவிட, உருவ வழிபாட்டில் மிக அக்கரை செலுத்தாத மேலை நாட்டினர் எந்த விதத்திலே கெட்டுப்போய்விட்டார்கள்?—எந்த வகையிலே வாழ்க்கை இன்பத்தை இழந்துவிட்டார்கள்?—எந்த முறையிலே நல்வாழ்வு நடத்த இயலாமற் போய்விட்டார்கள்? இவற்றிற்கு 'மெய்யன்பர்' கூட்டம் கூறும் சமாதானம் என்ன?

(தொடரும்)

டும் என்பது ஆண்டவனுடைய திட்டமாக இருந்ததில்லை! அவர் அறியாமையைக் கற்பித்தார்; அதுவும் கீழ்ப்படிதலைத் தவிர வேறெதையும் கற்பித்ததில்லை; கீழ்ப்படிதலுக்கு அவர் கால எல்லையற்ற பேரின்பத்தை அளித்தார்! அவர் வணங்கிக் கொடுப்பவர்களையும், முழங்காற்படியிடுபவர்களையும், குப்புறக் கவிழ்பவர்களையும் அவர் விரும்பினார்! அவர், ஐயங்கொள்வோர்களை, ஆராய்ச்சிபுரிவோரை, சிந்தனையாளர்களை, தத்துவாசிரியர்களை வெறுத்தார்! அவர்களுக்காக, அவர் கால எல்லையற்ற பெருஞ் சிறையை உண்டாக்கினார்; அங்கு அவர் தம் வெறுப்பின் பசியைத் தீர்த்துக்கொள்ள, வேண்டிய அளவு உணவைப் பெற்றுவந்தார்! அவர் ஏமாற்றுக்காரர்களையும், சான்று ஏதும் எதிர் பார்க்காமல் நம்புபவர்களையும் மிகவும் விரும்பினார்; அவர்களுக்காக அழியாப் பேரொளி வீசும் இடத்தை இல்லமாக அவர் ஆக்கித்தந்தார்! கேள்வி ஏதும் கேட்காதவர்களின் கூட்டத்திடையே அவர் மிகவும் மகிழ்ச்சியுற்றிருந்தார்!

ஆனால், இந்த மோட்ச உலகம் எங்கே இருக்கிறது; இந்த நரக உலகம் எங்கே இருக்கிறது? நாம் இப்பொழுது அறிவோம், இந்த மோட்ச உலகம் மேகமண்டலத்துக்கு மேலே இல்லை என்பதை; இந்த நரக உலகம் பூவுலகத்திற்கு அடியில் இல்லை என்பதை. தொலைநோக்குஆடி (தூரதிருஷ்டிக் கண்ணாடி) மோட்ச உலகத்தை இல்லாமற் போக்கிவிட்டது; சுழலும் உலகம் பழைய நரகத்தின் தீச்சுழல்களை அவித்துவிட்டது. மதம் கூறிய நாடுகளும், மதம் கற்பனை செய்த உலகங்களும் மறைந்தொழிந்துவிட்டன. மோட்ச உலகம் எங்கே இருக்கிறது என்பதை எவரும் அறியமாட்டார்கள்; அறிந்திருப்பதாக யாரும் பாசாங்கு செய்யமுடியாது. நரகம் இருக்கும் இடத்தை யாரும் அறியமாட்டார்கள்; அதனை அறிந்திருப்பதாக யாரும் பாசாங்கு செய்யமுடியாது. இப்பொழுது, பல மதவாதிகள், மோட்சம் என்பதும், நரகம் என்பதும் இடங்கள் அல்ல என்றும், அவை மன நிலைகளையே, நிலைமைகளையே குறிப்பனவாகும் என்றும் கூறுகின்றனர்.

கடவுள்களிடத்தும், பூதங்களிடத்தும் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை உலகம் முழுவதும் நிலவியிருக்கிறது. மனிதன் நல்லதுக்குப் பின்னால் கடவுளை நிறுத்துகிறான்; தீதுக்குப் பின்னால் பூதத்தை நிறுத்துகிறான்; நலத்துக்குப்பின்னால் ஞாயிற்றின் ஒளியை வைக்கிறான்; நல்ல அறுவடைக்குப் பின்னால் நல்ல கடவுளை வைக்கிறான்; நோய்க்குப் பின்னால் தீயவாய்ப்பைப் பார்க்கிறான்; இறப்புக்குப்பின்னால் கொடிய பேயைப் பார்க்கிறான்.

கடவுள்களும் பூதங்களும் வாழ்கிறார்கள் என்பதற்கு ஏதேனும் நல்ல சான்று இருக்கிறதா? கடவுள் இருக்கிறார் என்பதற்கும், பூதம் உண்டு என்பதற்கும் ஒரேவிதமான காரணந்தான் கூறப்படுகின்றது. இந்த இரண்டு வணக்கப் பொருள்களும் கற்பித்துக்கொள்ளப் பட்டவைகளே; ஒவ்வொன்றும் இருக்கக்கூடும் என்று ஊகிக்கப்படுவதேயாகும். அவைகள் கண்ணால் பார்க்கப்பட்டதில்லை; அவைகள் ஐம்புல உணர்ச்சிகளின் எல்லைக்குள் கட்டுப்பட்டதில்லை. வயதான கிழவி, பூதம் இருந்து தீரவேண்டும், இல்லையானால் அதனைப்போலவே, எப்படிப் படம் வரைந்துகாட்ட முடியும் என்று கேட்கிறாள்; அவள் மதக் கருத்துக்களில் பயிற்சிபெற்றவள் போலவும், கடவுளைப் பற்றிய செய்திகளில் தேர்ச்சி அடைந்தவள் போலவும் கேட்கிறாள்!

பூதம் இருக்கிறது என்பதில், எந்த அறிவுள்ள மனிதனும், இப்பொழுது நம்பிக்கை வைப்பதில்லை; கொடுந்தோற்றமுடைய பேய்க்காக அவன் அஞ்சுவதுமில்லை. ஆராய்ந்து பார்க்கும் திறம் படைத்த பெரும்பாலான மக்கள், வழிபடும் சொந்தக்கடவுளாகிய, 'படைக்கும் கடவுளை'க் கைவிட்டுவிட்டனர். அவர்கள், இப்பொழுது, பெரும்பாலும், "காணமுடியாதது", "எல்லையற்ற பேராற்றலாவது" என்றெல்லாம் பேசத் தலைப்பட்டுவிட்டனர்; ஆனால் அவர்கள் 'ஜெஹோவா'வை, 'ஜூபிட'ருடன் சேர்த்துவைத்து எண்ண முற்பட்டுவிட்டனர். அவர்கள், அவைகளைப், பழங்காலத்தில் கொண்டாடிய உடைந்த பொம்மைகள் என்றே கருதுகின்றனர்.

சான்று வேண்டி நிற்கிற—உண்மையை அறிய விரும்புகிற ஆண்களும் பெண்களும், தலையெழுத்துகளைப் பற்றிக் கவலைகொள்வதில்லை; அதிசயங்கள் என்று சொல்லப்படுபவைகளைப் பற்றிக் கவலையுறுவதில்லை; அதிர்ஷ்ட துர் அதிர்ஷ்ட நக்ஷத்திரங்கள், நாட்கள், எண்கள் ஆகியவைபற்றிக் கவலைப்படுவதில்லை; மந்திரங்களுக்காகவோ அல்லது தாயத்துக்

களுக்காகவோ கவலைகொள்வதில்லை; வால் நட்சத்திரங்களுக்காகவோ அல்லது கிரகணங்களுக்காகவோ கவலைப்படுவதில்லை; நல்ல ஆவிகளிடத்தோ அல்லது தீய ஆவிகளிடத்தோ நம்பிக்கை கொள்வதில்லை; கடவுள்களிடத்தோ அல்லது பூதங்களிடத்தோ நம்பிக்கை வைப்பதில்லை. பொதுவான அல்லது தனியான நன்மைபயக்கும் என்று அவர்கள் எதன்மீதும் குருட்டு நம்பிக்கை வைப்பதில்லை. நல்லதை மீட்கிறது, காப்பாற்றுகிறது, ஆதரிக்கிறது என்பதற்காகவோ, அல்லது தீயதைக்—கொடியதைத் தண்டிக்கிறது என்பதற்காகவோ எந்த ஆற்றலின்மீதும் அவர்கள் குருட்டுநம்பிக்கை கொள்வதில்லை. மனித சமுதாய வரலாற்றுக் காலம் முழுவதிலும், வழிபாட்டுரைக்குப் பதிலுரை தரப்பட்டது என்பதை அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. இடப்பட்ட பலிகளெல்லாம் வீணாகிவிட்டன என்றும், எரிக்கப்பட்ட நறுமணப்புகைகளெல்லாம் பாழாகிப் போயின என்றும் அவர்கள் எண்ணுகிறார்கள். உலகமானது, நச்சுப் பூச்சிகளுக்காகப் படைக்கப்பட்டு, அவைகளுக்காகத் தயாராக்கப்பட்டது என்பதை, அவர்கள், எந்த அளவுக்கு நம்புவதில்லையோ, அதே அளவுக்கு, அது மனிதர்களுக்காகப் படைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டது என்பதையும் நம்புவதில்லை. எஸ்கிமோயர்களுக்குக் கொழுப்பை உணவாக அளிப்பதற்காகவே, வேல்ஸ் என்ற ஒருவகை மீனினம் உண்டாக்கப்பட்டது என்பதையோ அல்லது விட்டில்பூச்சிகளைக் கவர்ந்து, அவைகளை அழிக்கவே, தீச்சுழல்கள் உண்டாக்கப்பட்டன என்பதையோ, பொருந்தி வருபவை என்று அவர்கள் நினைப்பதேயில்லை. எல்லாப் பக்கங்களிலும் சான்றுக்கான விளக்கங்கள் தென்படுகின்றன; நல்லது நிகழ்வதற்கான காரண விளக்கங்களும், தீயது நிகழ்வதற்கான காரண விளக்கங்களும் தென்படுகின்றன. எல்லாப் பக்கங்களிலும் நன்மையும், கொடுமையும் இருக்கின்றன; சிறிது உழைப்பிற்குப் பிறகே நல்லது காக்கப்படுகிறது, சிறிது உழைப்பிற்குப் பிறகே தீயது அழிக்கப்படுகிறது. ஒவ்வொன்றும் நண்பர்களாலும், பகைவர்களாலும் சூழப்பட்டிருக்கின்றன; அவை அன்பால் காக்கப்படுகின்றன, வெறுப்பால் அழிக்கப்படுகின்றன. வளர்ச்சியின் அறிகுறி எவ்வளவு தெளிவாகத் தெரிகிறதோ அவ்வளவு தெளிவாக வீழ்ச்சியின் அறிகுறியும் தென்படுகிறது; வெற்றியின் அறிகுறியைப்போலவே தோல்வியின் அறிகுறியும் புலப்படுகிறது; இன்பத்தின் அறிகுறியைப்போலவே, துன்பத்தின் அறிகுறியும் விளங்குகிறது. இயற்கை, கேடயமும் வாளும் ஏந்திக்கொண்டு, ஒருகையால் கட்டிமுடிக்கிறது, மற்றொரு கையால் அழித்துத் தள்ளுகிறது; ஒரு கையால் காப்பு அளிக்கிறது, மற்றொரு கையால் கொன்று குவிக்கிறது; ஆனால் ஆக்கத்திற்காக, அழிவு வேலை செய்கிறது. எல்லா வாழ்வும் சாவை நோக்கி நடக்கின்றன; எல்லாச் சாவும் வாழ்வை நோக்கித் திரும்புகின்றன. எங்குபார்க்கினும் கழிவும் சேமிப்பும், அலட்சியமும் அக்கறையும் நிகழ்கின்றன!

அவனுக்கு இன்னும் தெரியாது!

ஹோட்டலில் தங்குவதற்குப் புதிதாக வந்த ஒருவர், தனது அறையில் சாமான்களையெல்லாம் கணக்குப் பார்த்து வைத்தார். எல்லாம் சரியாக இருந்தன. மற்றவர்களெல்லாம் பயமுறுத்தினதைப் போலன்றி, எதுவும் காணாமற்போகவில்லை. காலைச் சிற்றுண்டியைச் சாப்பிட்டுவிட்டு வெளியே போகக் கிளம்பியவர், நேரத்தைப் பார்க்கப் பையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தார். தொங்குகிற சங்கிலியுடன், அந்தக் கடிகாரத்தைக் காணோம்!

உடனே பதறிப்போய், அவர் ஹோட்டல் முதலாளியிடம் முறையிட்டார். ஹோட்டல் முதலாளி அவரைச் சமாதானப்படுத்தி, "உங்களுடன் வேறு யாராவது சாப்பிட்டார்களா?" என்று கேட்டார். புதிதாக வந்தவர் கவனப்படுத்தி அடையாளம் சொன்னார்.

"சரி, நீங்கள் இங்கேயே இருங்கள்!" என்று ஹோட்டல் முதலாளி போய், சிறிது நேரத்துக்கெல்லாம் கடிகாரம் சங்கிலியுடன் திரும்பிவந்தார்.

விருந்தினருக்கு ஆச்சரியமாகிவிட்டது. ஹோட்டல் முதலாளியைப் பாராட்டித் தனது நன்றியைத் தெரிவித்துவிட்டு, "அவன் என்ன சொன்னான்?" என்று எடுத்தவனைப்பற்றிக் கேட்டார்.

ஹோட்டல் முதலாளி சுற்றுமுற்றும் பார்த்து, "உஸ்! சத்தம் போடாதீர்கள்! அவனிடமிருந்து கடிகாரத்தை நான் எடுத்துவந்தது, அவனுக்கு இன்னும் தெரியாது," என்று

மனைக்கு இசைந்த மங்கை

[எழினி]

அகன்ற பெரிய வீடு; அதன் அருகே அழகான தோட்டம். தோட்டத்தில் அடர்ந்து வளர்ந்த மரங்களும், தழைத்துப் பரந்த செடிகளும், ஏறிப்படர்ந்த கொடிகளும், மண்டிக் கிடக்கும் பயிர்களும் பல்வேறு வண்ணங்களை வாரி இறைத்துக் காண்போர் உள்ளத்திற்குக் குளிர்ச்சி தருகின்றன. காய்த்துக் குலுங்கும் கனிகளின் வாடையும், பூத்துக் குலுங்கும் மலர்களின் மணமும் மூக்கைத் துளைக்கின்றன. தோட்டமோ கட்டுக்காவல் பூண்டது; நாற்புறமும் வலிவான வேலிகள் சூழப்பெற்றது. அதனை அடுத்து நடைவழி ஒன்று செல்கிறது. நடைவழி வழியாகப் போகும்போதும் வரும்போதும் தோட்டத்தின் வளப்பத்தைக் கண்டு களித்துக்கொண்டு செல்வது அவ்விளைஞனின் வழக்கம். அவன் மிகச் சிறுவனாக இருக்கும்போது, தோட்டத்தின் வெளியே இருந்து, வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் மரக்கிளைகளில் தொங்கும் கனிகளைக், கல்லால் அடித்து விழச் செய்து, யாருக்கும் தெரியாமல் அவற்றை எடுத்துக்கொண்டு ஓடுவது அவன் பழக்கம். வயது ஏறஏற சிறிதுசிறிதாக அந்தப் பழக்கமும் விடுபட்டது. இப்பொழுது அவனோ, பிறர், தன்னை மதிக்கவேண்டும் என்று எண்ணுகிற காளைப்பருவத்தை அடைந்திருக்கிறான்.

தோட்டத்தை ஒட்டியுள்ள வீட்டிலிருந்து தோட்டத்திற்குள் நுழைவதும், தோட்டத்தில் சுற்றித்திரிவதும், கனி பறிப்பதும், சுள்ளி பொறுக்குவதும், சிலவேளைகளில் கன்றினை மேய்த்துத்திரிவதும், கலயம் ஏந்திச் செல்வதும்ஆன நிலைமைகளில் சிறு பெண் ஒன்று தோற்றம் அளிப்பதை, அவ்விளைஞன் சிறுவனாக இருந்தபோது பார்த்திருக்கிறான். அப்பொழுதெல்லாம் யாரோ அந்த வீட்டைச் சேர்ந்த பெண் என்ற அளவிலே பாராமுகத்துடன் நடமாடிவந்தான். அந்தப் பெண் சிறிது வளர்ந்து வந்ததையும் பார்த்துக்கொண்டுதானிருந்தான். அவ்விளைஞன் கட்டிளங்காளையாக வளர்ந்திருக்கும் இப்பொழுது, ஒருநாள், அந்த நடைவழி வழியாக நடந்து போய்க்கொண்டிருக்கிறான். போகும்போது தோட்டத்துப் பக்கம் பார்வையைச் செலுத்துகிறான். அவன் என்றுங் கண்டிராத அழகிய பெண்ணொருத்தி குதித்துக்குதித்து ஓடுவதைப் பார்க்கிறான்; அசைவற்று நிற்கிறான்; உள்ளத்தைப் பறிகொடுக்கிறான்; உற்று நோக்குகிறான்; அழகை உறிஞ்ச முனைகிறான். சற்றுநேரம் உற்றுப் பார்த்ததற்குப் பிறகு, தன்னைத்தானே தெளிவுபடுத்திக்கொண்ட பிறகு, அந்தக் கட்டழகி வேறு யாருமில்லை, தான் அடிக்கடி அந்தத் தோட்டத்திலே பார்த்த பெண்தான் என்ற முடிவுக்கு வருகிறான்; பெருமூச்செறிகிறான்.

“இவ்வளவு குறுகிய காலத்தில் எப்படி இவ்வளவு வளர்ச்சி பெற்றாள். நாம் கடைசியாகச் சரியாகப் பார்த்தது, ஐந்தாறு திங்களுக்கு முன்தானே இருக்கும். இவ்வளவு பெரியவளாக, இவ்வளவு அழகுடையவளாக, இவ்வளவு விரைவாக இவள் வளருவாள் என்று நாம் கனவில்கூட கருதவில்லையே! நாம் நாள்தோறும் இந்தவழியாகத்தானே போகிறோம்! இத்துணை நாளும் நாம்தான் இவளைப் பார்க்கவில்லையா...? அல்லது அவள்தான் நம் கண்ணில் தட்டுப்படாமல் இருந்தாளா....?” என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டு அவள் நடை உடை அசைவுகளையெல்லாம் இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருக்கிறான். அவன்

ஓடிப்போய் எதோவொரு செடியிலிருந்து காய்களைப் பறித்துக்கொண்டு, மீண்டும் திரும்பி குதித்துக்கொண்டு ஓடி, வீட்டிற்குள் நுழைந்துவிடுகிறாள். மீண்டும் வெளியே வருவாளா என்று நீண்டநேரம் நின்று பார்க்கிறான். சரி, தன்வழியே போகலாம் என்று சில அடிகள் போகிறான்; அவள் வெளியே வருகிறாளா என்று அவளைத் திரும்பிப்பார்க்கச் சொல்லுகிற அவனது நெஞ்சம். சிறிது நின்றுபார்க்கிறான். அவள் வரவில்லையே என்ற ஏக்கத்தோடு, மேலும் சிறிது தொலைவு நடந்துபார்க்கிறான்; நிற்கிறான்; அவள் தோற்றத்தை எதிர்பார்க்கிறான்; ஏமாறுகிறான்; சோர்வடைகிறான்; தொடர்ந்து நடக்கிறான். இப்படியாக அவன் தோட்டத்தைக் கடந்து அப்பால் செல்லும் வரையில், அவள் தோற்றத்தைக் காண முடியவேயில்லை. அவளைப்பற்றிய நினைவோடு வீடு ஏகுகிறான்.

அக்கட்டழகி தோட்டத்திலே நடமாடமாட்டாளா என்ற எண்ணத்துடன், மறுநாள் வருகிறான்; மூன்றாம் நாள் வருகிறான்; தொடர்ந்து வருகிறான். அவளைச் சிலநேரங்களில் காண முடிகிறது; பல நேரங்களில் காணமுடியாமற் போகிறது. காணும் நேரங்களில் அவள் அழகையும், சாயலையும், அசைவையும் கண்டு அகமகிழ்கிறான்; அவளைக் காணாத நாட்களில் ஏமாற்றமும் ஏக்கமும் கொள்கிறான்.

அவனோ தோட்டத்து வேலிக்கு வெளியே நாள்தோறும் காத்திருக்கிறான்; அவளோ தோட்டத்தில் சிற்சிலபொழுது மட்டுமே நடமாடுகிறாள். தனக்காக ஒரு ஆடவன் வெளியே காத்திருக்கிறான் என்பதை அவள் அறியவில்லை! அவள்தான் எப்படி அறிவாள்? அவள் அப்படியொரு நிலைமையை எதிர்பார்க்கவில்லையே!

"அவளைக் கண்டு களித்துவிட்டுச் செல்லுவதிலேயே காலங்கழித்துக்கொண்டுபோவதா? அவளை நேரில் காணவேண்டாமா? கண்டுபேசி அவள் அன்பைப் பெறவேண்டாமா?" என்றெல்லாம் அவன் நெஞ்சு அவனுக்குக் கூறுகிறது. எப்படியேனும் அவளைக் கண்டு பேசிவிடவேண்டும் என்ற உறுதியுடன் ஒருநாள் தோட்டத்துப் பக்கம் வருகிறான். தோட்டத்துக்குள் துணிந்து நுழைந்துவிடுகிறான். ஒரு மரத்தின் அடியில் மறைந்துநின்று அவள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான்.

கன்றுக்குட்டியொன்று துள்ளி ஓடிவர, அதன் நீண்ட தாம்புக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு பின்னால் அவள் ஓடிவருகிறாள். அவன் திடீரென்று குறுக்கே போய் நிற்கிறான். கன்றுக்குட்டி அவனைச் சுற்றிக்கொண்டு ஓடுகிறது. கயிறு அவனைப் பின்னும் போலிருக்கிறது. ஒரு ஆடவன் தன் எதிரே எதிர்பாராமல் வந்து நிற்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போகிறாள்; என்ன செய்வதென்று அவளுக்குத் தோன்றவில்லை; கன்றின் தாம்புக்கயிற்றை அப்படியே கைநழுவவிட்டுவிட்டு அசைவற்று நின்றுவிடுகிறாள். கன்றுக்குட்டி, தானாக ஓடிவிடுகிறது.

"ஏன் திகைக்கிறாய்? உனக்கு என்ன வேண்டும்?" என்று அவன் அவளை வினவுகிறான். அச்சத்தாலும், நாணத்தாலும் பிடிக்கப்பட்ட அவளுக்கு என்ன சொல்லுவது என்று தோன்றவில்லை.

"நான் போய்க் கன்றுக்குட்டியைப் பிடித்துக் கொண்டு வரட்டுமா?" என்று கேட்கிறான். அவள் வாய் பேசாமல் அப்படியே நிற்கிறாள். பிறகு இந்தக் காட்சியை யாரும் பார்த்துவிட்டால், என்ன நினைப்பார்களோ என்ற அச்சம் மேலிடுகிறது. உடனே திரும்பி ஓட்டமாய் ஓடி வீட்டிற்குள் நுழைந்துவிடுகிறாள். வீட்டிலிருந்து வேறு யாரேனும் வம்புக்கு வருவார்களோ என்று அஞ்சி அவன் விரைவாக வெளியேறிவிடுகிறான்.

அழகான ஒரு இளைஞன் எதிர்ப்பட்டதிலிருந்து அவளுக்கே ஒருவித திகைப்பும் தித்திப்பும் ஏற்படுகின்றன. தோட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியைத் தாயிடம் சொல்லலாமா என்று எண்ணுகிறாள்; வேண்டாம் என்று தனக்குள்ளாகவே அடக்கிக்கொள்கிறாள்.

அதற்குப் பிறகு அவன் தோட்டத்துப் பக்கம் வருவதைப் பார்த்தால், அவன் வந்து, நின்று, தோட்டத்தினிடத்து நீண்டநேரம் பார்வை செலுத்திவிட்டுப் போகும் வரையில், அவள் எங்கேனும் ஒளிந்திருந்து, அவனைக் காண்பதிலே தனி மகிழ்ச்சி கொள்கிறாள். சில நேரங்களில் அந்தக் கட்டழகியும் தன்னைப் பார்க்கிறாள் என்பதை அறிந்துகொண்ட அவன், நாளுக்கு நாள் மகிழ்ச்சியும், மனவுறுதியும் கொள்கிறான்.

மீண்டும் ஒருநாள், அவளை நேரில் கண்டு பேசினால் என்ன என்ற துணிவு அவனுக்குப்

பிறக்கிறது. தோட்டத்துக்குள்ளேபோய் மரமொன்றின்பக்கம் மறைந்துநின்றுகொள்கிறான். கன்றுக்குட்டியைத் தோட்டத்தில் புல்மேயவிடுவதற்காகத், தாம்புக்கயிற்றின் நுனி கீழே தொங்க, அதனை, அதன் நடுவே பற்றிக்கொண்டு, கன்றினை விரட்டிக்கொண்டு வருகிறாள். கன்றும் அவளும் தன்னைத் தாண்டியவுடன், அவன் மெல்ல பின்புறமாய்ச் சென்று, அந்தத் தாம்புக்கயிற்றின் நுனியைப் பிடித்து இழுத்து நிறுத்துகிறான். தாம்புக்கயிற்றைப் பின்னால் யாரோ பிடித்திழுத்து நிறுத்துவதைக் கண்ட அவள், சடேலென்று திரும்பிப் பார்க்கிறாள். அவன் நிற்பதைக் காண்கிறாள். முதல் தடவை பார்த்தபோது ஏற்பட்டதைப் போன்றதொரு அச்சம் அவ்வளவாக அவளுக்கு ஏற்படவில்லை. அவள் கயிற்றைக் கையினின்றும் நழுவவிடுகிறாள்; அவனும் விடுகிறான்; கன்று ஓடிவிடுகிறது.

"நீ யார்? இங்கு ஏன் வந்தாய்?" என்று அவள் கேட்கிறாள்.

"உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்!" என்று விடையிறுக்கிறான்.

"நீ ஏன் என்னைப் பார்க்க வரவேண்டும்? உனக்கும் எனக்கும் என்ன உறவு?"

"உறவு ஏற்படுத்திக்கொள்ளலாம் என்று தான் வந்தேன்."

"முன்பே நீ ஒரு முறை வந்து என்னைத் தடுத்தாய்! இப்பொழுதும் வந்து தடுக்கிறாய்! இதற்கு என்ன பொருள்?"

"பொருளை நீதான் புரிந்துகொள்ள வேண்டும்."

"ஏடா! உனக்கு என்ன பித்து பிடித்துவிட்டதா? நீ இதை விட்டு வெளியேறு! உம்! என்னைப் போகவிடு முதலில்" என்கிறாள்.

அதுகேட்டு அவன், "நான் உன்னை இவ்விடத்தினின்றும் போகவிடேன். தன்னைத் தொட வருபவர்களை விலக்கிவிட்டு, மேன்மேலும் பாய்ந்து செல்லும் பசுவைப்போல, நீயும் வேண்டுமானால், தொழுவத்தினின்றும் ஓடிவந்து, செறுத்து நோக்கி, என்னைத்தள்ளிவிட்டு, மேற்சென்று, பின்பு என்னைச் சினந்துகொள்" என்று கூறுகிறான்.

அதற்கு அவள், "நீ இவ்விடத்தினின்றும் உடனே அகன்றுபோ. அப்படி ஏன் சொல்லுகிறேன் என்றால், புதிதாக ஈன்றெடுத்த தன்னுடைய கன்றைத் தொடுபவர்கள்மீது, தாய்ப்பசு எப்படிச் சினத்துடன் பாய்ந்துசெல்லுமோ, அதைப்போல, நீ என்னைத் தொட வரும் காட்சியை, என் தாய் பார்த்துவிடுவாளேயானால், மிக்கச் சினப்பெருக்குக் கொண்டவளாய் வந்து, மிகவும் சீறிவிழுவாள். அப்படிப்பட்ட கெடுதி உனக்கு வாராமல், நீ இப்பொழுதே உன்னைப் பாதுகாத்துக்கொள்" என்று சொல்லுகிறாள்.

நங்கையின் கூற்றைக்கேட்ட நம்பி வாய்விட்டுச் சிரித்துவிடுகிறான் அவன் சிரிப்பு அவளுக்குச் சினத்தை மூட்டுகிறது.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்கிறாள்.

அதற்கு அவன், "ஒன்றுமில்லை! நீ மட்டும் எனக்கு அருள்செய்து, என்னோடு கூடி மகிழ இசைந்துவிடு! பிறகு பாரேன்! இங்கே உன் தாய் வந்தாலும் வரட்டும்; அல்லது வேறு அயலார் யாரேனும் வந்தாலும் வரட்டும்; அல்லது உன் தந்தையே வந்தாலும் வரட்டும்! அதுபற்றி நான் வருத்தப்படமாட்டேன்! அவர்களுக்கெல்லாம் நான் அஞ்சுவேன் என்று எதிர்பார்க்கிறாய். நான் ஒருக்காலும் அஞ்சமாட்டேன். உன் அருளைத்தான் வேண்டி நிற்கிறேன்" என்று கூறுகிறான்.

"இதென்ன, பெருந்தொல்லையாக இருக்கிறதே! நான் எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டேன் என்கிறாயே! சோவென்று பெய்யும் மழையிலே தலை சாய்த்து நிற்கும் எருதுபோல, என் முன்னால் தலையைச் சாய்த்துக்கொண்டு, அகலமாட்டேன் என்று பிடிவாதம் செய்கிறாயே! நான் சொல்லும் ஒவ்வொன்றுக்கும் எதிராக ஏதேனும் சொல்லி, மயங்கி மயங்கி நின்றுகொண்டிருக்கிறாயே! உனக்கோ நாணம் சிறிதுமில்லை! நான் உனக்கு அஞ்சுவேனா அல்லது என் தாய்க்கு அஞ்சுவேனா? இங்கு நீண்ட நேரம் நின்றால், யாரேனும் பார்த்துவிடுவார்களே!....நான் கறவைக்கலத்தோடு நாளை பசு மேய்க்கச் செல்லுகின்ற மந்தைவெளிப்பக்கம் செல்வேன், நீயும் அங்கு வருவதுபோல் வா. அங்குக் கூடியிருந்து மகிழலாம்" என்று வேறு வழியின்றி, மணத்தற்கு இசைவு தெரிவித்துக், குறியிடம் கூறி, விரைவாக அவ்விடம் விட்டு அகலுகிறாள்.

தலைவன் தன் எண்ணம் ஈடேறிவிட்டது

என்ற மட்டற்ற மகிழ்ச்சியுடன் தோட்டத்தை விட்டு வெளியேறுகிறான்!

ஃ ஃ ஃ

இது முல்லைக்கலி 16-வது செய்யுளை அடிப்படையாக வைத்துத் தீட்டப்பட்ட காதலோவியமாகும். தலைவன் தலைவியரிடையே காதல் வளரும் தன்மையையும், பின்னர் களவொழுக்கம் நடத்த உடன்படும் தன்மையையும் சோழன் நல்லுத்திரன் இச்செய்யுளில் அழகுபடக் கூறியுள்ளார். தலைவனும் தலைவியும் இடையனும் இடைச்சியுமாக இருப்பதால் அவர்கள் வாயில் வரக்கூடிய உவமைகளையே ஆசிரியர் இயற்கை நயந்தோன்றக் கூறியுள்ளார். பசு எதிர்த்து வருவோரை விலக்கிச் செல்லுவது, புதிதாகக் கன்று ஈன்ற பசு கன்றினைத் தொடுவார்மேல் சீறிப்பாய்வது, மழையில் நனையும் எருது தலையைச் சாய்த்துக் கொண்டிருப்பது போன்ற நிகழ்ச்சிகளை உவமையாக்கிக் கூறியிருப்பது, படித்து மகிழ்வதற்குரியதாகும். பெண்கள் ஆரம்பத்தில் மிகவும் பிகு செய்து, இறுதியில் காதலனுக்குக் கட்டுப்பட்டுவிடுவார்கள் என்ற பொது உண்மையை ஆசிரியர் தெளிவுபட விளக்கிக்காட்டுகிறார். தலைவன் தலைவியர் இயல்பை இயற்கையாக விளக்கிச் செல்வது படிப்போர் உள்ளத்திற்கு இன்பம் ஊட்டுவதாகும்.

ஃ ஃ ஃ

பாங்கரும் பாட்டங்கால் கன்றொடு செல்வேம்எம்
தாம்பின் ஒருதலை பற்றினை ஈங்(கு)எம்மை
முன்னை நின்(று) ஆங்கே விலக்கிய எல்லாநீ
என்னைஏ முற்றாய் விடு;

விடேஎன், தொடீஇய செல்வார்த் துமித்(து) எதிர் மண்டும்
கடுவய நாகுபோல் நோக்கித் தொடுவாயில்
நீங்கிச் சினவுவாய் மற்று;

நீநீங்கு, கன்றுசேர்ந் தார்கண் கதம்ஈற்று ஆச் சென்றாங்கு
வன்கண் ணளாய்வரல் ஓம்பு;

யாய்வருக ஒன்றோ பிறர்வருக மற்றுநின்
கோவரினும் இங்கே வருக தளரேன்யான்
நீஅருளி நல்கப் பெறின்;

நின்னையான் சொல்லினவும் பேணாய் நினைஇக்
கனைபெயல் ஏற்றின் தலைசாய்த்(து) எனையதூம்
மாறுஎதிர் கூறி மயக்குப் படுகுவாய்
கலத்தொடுயாம் செல்வுழி நாடிப் புலத்தும்
வருவையால் நாணிலி நீ.

[முல்லைக்கலி—16]

[பாங்கர் - (வீட்டுப்) பக்கம்; பாட்டங்கால் - தோட்டம்; எல்லா - ஏடா; என்னை - என்ன; ஏமுற்றாய் - பித்தேறினாய்; தொடீஇய - தொடுவதற்கு; துமித்து - விலக்கி; மண்டும் - வேகமாகச் செல்லும்; கடு-கடிய; வயம் - வலிமை; நாகு – பசு; தொடுவாயின் - தொழுவாயில்; அதாவது தொழுவத்தின் வாயில், கதம் - கோபம்; ஈற்றா - புதிதாகக் கன்றுபோட்ட பசு; சென்றாங்கு - செல்வதைப்போல; வன்கண்ணளாய் – தறுகண்மையை யுடையவளாய்; வரல் - வரவை; ஓம்பு - பாதுகாத்துக்கொள்; ‘ஒ’ - அசை; கோ - தந்தை; பேணாய் - காப்பாற்றாதவனாய்; நினைஇ - (கூட்டத்தையே) நினைந்து; கனைமையல் - செறிந்த மழை, பெருமழை; ஏற்றில் - எருதுவைப்போல; எனையதூம் – யான் கூறுபவற்றிற்கு; மயக்குப் படுகுவாய்–மயக்கமுறுகின்றவனே; கலத்தொடு – கறவைக்கலத்தோடு; செல்வுழி–செல்லும்போது; புலத்து – பசுமேய்க்கும் புலத்திடத்து; வருவையாய் – வருவாயாக; நாணிலி – வெட்கமில்லாதவனே.]

சிறுகதை

காதற் கடிதம்

[இரா. செழியன்]

தானெழுதிய காதற்கடிதங்கள் கலைந்து கிடப்பதைக் கண்டதும் மேகநாதன் திடுக்குற்றான்; கனவிலிருந்து விழித்ததும் காலிடறிக் கீழே விழுந்து பலமான அடிபட்டுத், தலை சுற்றுவதுபோன்ற வேதனை நிலை அவனுக்குப் பிறந்தது.

அவனுடைய கனவுப் பூங்காவில் பூத்த கடித மலர்கள்! அந்த மலர்கள் வீசிடும் காதல் மணம் அந்தப் பூங்காவை நிறைவு செய்தது. அந்தப் பூங்காவும் மலர்களும் மேகநாதனைத் தவிர வேறெவரும் காணாதவாறு இருந்தன. ஆனால் இப்பொழுது வேறொருவரே அந்த மலர்களை எடுத்துப்பார்த்து, அலங்கோலமாக்கிவிட்டுப் போயிருக்கின்றார். மேகநாதனால் சிறிதுகூட நம்பமுடியவில்லை. மறுபடியும் கடிதங்களைப் பார்த்தான். எதுவும் காணாமற்போகவில்லை. ஆனால் அவை முன்பு வைக்கப்பட்ட ஒழுங்கான நிலை மாறி, அவசரமாக மடிக்கப்பட்டும், அடுக்கப்பட்டும் கிடந்தன. மிகப்பத்திரமாக, வேறெவருக்கும் தெரியாத விதத்தில், அந்தப் பெட்டியில் வைத்திருந்தான். பெட்டியைப் பூட்டுவதில்லையென்றாலும், அவன் வெளியில் போகும்பொழுதெல்லாம் அறைக்கதவைப் பூட்டிவிட்டுதான் போகிறான். அவனிருக்கும் பொழுது அவனறியாமல் யாரும் அந்தப் பெட்டியைத் திறந்திருக்கமுடியாது. யார் வந்திருக்கமுடியும்?

வெறித்த பார்வையுடன், மேகநாதன் வெளியே வந்து, பார்த்தான். வெளிமாடியில் எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தனர் நிம்மதியாக. தூரத்தில் குறட்டை சத்தம்கூட வந்தது. மேகநாதனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. சிதறிக்கிடக்கும்—உருத்தெரியாமல் சிதறி, வேகமாகச் சுழன்றுகொண்டிருக்கும் சிந்தனையை அவனால் ஒன்றுசேர்க்க முடியவில்லை. வேகமாக அங்கு நடந்துகொண்டிருந்த பொழுது, அவனின் காலில் இடறிய நாற்காலி மீதுதான் அவன் கோபம் பாய்ந்தது. அதுவும் ஒடிந்த நாற்காலி! காலால் அதை ஓங்கி உதைத்துத் தள்ளினான். சற்று தூரத்தில் போய் அது விழுந்தது. மேகநாதனின் காலும் நோவெடுத்தது.

நாற்காலி விழுந்த சத்தம் கேட்டு, அந்த உணவு விடுதியில் வேலைபார்க்கிற கிட்டு என்ற வேலையாள் விழித்துக்கொண்டான். மேகநாதன் காலை நொண்டிக்கொண்டு நடப்பதைப் பார்த்து, "என்னங்க, அடிபட்டுவிட்டதா!" என்று பரிவுடன் கேட்டான். "ஒன்றும் கிடையாது போ!" என்று சொல்லிவிட்டு, மேகநாதன் தனது அறைக்குப்போய், படுக்கையைத் தூக்கிப்போட்டு, படுத்தான். நீண்ட நேரம்வரைத் தூக்கம் வரவில்லை. பின் கண்ணயர்ந்தபோதிலும், பயங்கரக் கனவுகள்தாம் வந்தன.

காலையில் நெடுநேரமாகியும் மேகநாதன் விழிக்காததைக் கண்டு, அவனது பக்கத்து அறையிலிருக்கும் பாண்டுரங்கம் அவனைத் தட்டி எழுப்பினான். திடீரென்று விழித்த மேகநாதன், "நீ அவற்றைப் பார்த்தாயா?" என்று பாண்டுரங்கத்தை உலுக்கினான்.

பாண்டுரங்கத்துக்கு ஒன்றும் புரியவில்லை. "எதைப் பற்றிக் கேட்கிறாய்?" என்று கேட்டான். எதைப்பற்றி யென்று சொல்லமுடியும்? மேகநாதன் கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்த்தான்.

"தூக்கத்தில் இரண்டு மூன்று தடவை உளறினாயே! ஏதாவது கனவுகண்டாயா?" என்று பாண்டுரங்கம் கேட்டான்.

“ ஒன்றுமில்லை ” என்று மேகநாதன் எழுந்தான்.

அன்று காலை முழுவதும், தனது கடிதங்களை யார் பார்த்திருக்கமுடியும் என்பதை ஆராய்வதிலேயே மேகநாதனின் மனம் ஆழ்ந்திருந்தது. பக்கத்து அறையிலிருக்கும் பாண்டுரங்கனாயிருக்குமா? அவன் வெறும் வெகுளியாயிற்றே! ஒரு ரகசியத்தைக் கால்மணி நேரங்கூட தனக்குள் வைத்திருக்க முடியாதே. அதிலும், அவன் பேசுவதிலிருந்தும், கேட்பதிலிருந்தும் அவனுக்குக் கடிதங்களைப்பற்றி ஒன்றுந் தெரிந்திருக்கமுடியாது.

மேகநாதனின் அறைக்கு அவனுடன் வேலை பார்க்கிற கந்தப்பன் அடிக்கடி வந்துபோவது வழக்கம். ஆனால் அவன் மேகநாதனுடன்கூட வந்து, சிறிதுநேரம் பேசிவிட்டுப் போவதைத் தவிர, தனியாக மேகநாதனில்லாத சமயத்தில் வருவது கிடையாது.

எவ்வளவோ நண்பர்கள், தெரிந்தவர்கள், கொஞ்சங்கூட முன்பின் தெரியாதவர்கள் எல்லாம் அந்த அறைப்பக்கம் வந்துபோகிறார்கள். அவர்களில் யார் 'குற்றவாளி' யென்று சொல்ல முடியும்? பேப்பர் போடுகிற பையனிலிருந்து, குப்பை கூட்டுகிற முனியன்வரை எல்லோரையும் மேகநாதன் கவனித்துப் பார்த்தான். யாரையும் குறிப்பிட்டுச் சொல்லமுடியவில்லை.

ஆபீசில் மேகநாதனுக்குச் சரியாக வேலை பார்க்க முடியவில்லை. யாராவது ஒருவர் திடீரென்று வந்து அவன் முதுகில் தட்டி, “ நான் நீ எழுதிய காதற் கடிதங்களைப் படித்தேன்! என்ன காதல்! என்ன பைத்தியக்காரத்தனம்!” என்று கேலிசெய்வார்களென்று எதிர்பார்த்தான். அவனுக்கு இருந்த மனக்குழப்பத்தில் மற்றவர்கள் வேறு ஏதாவது கேட்டாலும், அவன் திடுக்கிட்டு உட்கார்ந்து, பதில்தரமுடியாமல் விழித்தான். மற்றவர்களெல்லாம் தன்னையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருப்பதைப் போல அவனுக்குத் தோன்றியது. ஒரு பேப்பரை எடுத்துப் பார்ப்பதுபோலத் தன் முகத்தை மறைத்துக்கொண்டு, மற்றவர்களைக் கவனித்தான். அவர்களெல்லாம் தங்கள் வேலையில் ஈடுபட்டிருந்தனர். வீணாக மேகநாதன் பயந்துகொண்டிருந்தானே யொழிய, மற்றவர்கள் யாரும் அவனைப் பயமுறுத்தும் விதத்தில் நடந்துகொள்ளவில்லை. சாதாரணமாகவே, பேசினார்கள், நடந்துகொண்டார்கள்.

காலையில் மிகக் குழப்பத்துடன் வெளியேறிய மேகநாதன், மாலையில் விடுதிக்குத் திரும்பும்பொழுது மனக்கலக்கம் குறைந்து காணப்பட்டான். அறைக்குள் நுழைந்ததும், முதலில் கடிதங்களை யெடுத்துப் பார்த்தான். எல்லாவற்றையும் கிழித்துப்போடலாமாவென்த் தோன்றியது. ஒரு முறை முதலிலிருந்து கடைசிக் கடிதம்வரைப் படித்தான். படித்து முடித்ததும் அவற்றைக் கிழித்துப்போட மனமில்லை. மேலும் அந்த அவசியமும் இப்பொழுது அவனுக்கு இல்லாமற் போய்விட்டது. அவன் பயந்ததுபோல வேறு யாரும் அக்கடிதங்களைப் படித்துவிட்டதாகத் தெரியவில்லை. கடிதங்கள் அலங்கோலமாகக் கிடந்தது, ஒருசமயம் தான் அவசரமாக வைத்ததினால் ஏற்பட்டிருக்கலாம் என்று மேகநாதன் சமாதானப்படுத்திக்கொண்டான். அவன் எதிர்பார்த்தபடி புயல் ஏதும் அன்று வீசவில்லை. அவன் மனதில் ஏற்பட்ட கலவரம் நீங்கி, அவன் அமைதியடைந்தான்.

புயல் எதிர்பார்த்தபடி வரவில்லை, ஆனால் அது முற்றிலும் நீங்கிவிடவில்லை. அவனுக்குக் கிடைத்த அமைதி, புயலுக்குமுன் நிலவுகிற அமைதியைப்போலிருந்தது. இனிப் பயமில்லை, என்று அவன் அமைதியடைந்த நேரத்தில், அவனைச் சூழ்ந்து பலமான புயல் மறுநாள் காலை வீசத்தொடங்கியது.

காலையில் விடுதியை விட்டுப் போகும்பொழுது, வெற்றிலைப் பாக்குக்கடைக்காரன் தன்னைப் பார்ப்பதே புதுவிதமாக மேகநாதனுக்கு இருந்தது. அவன் சிறிதுதூரம் நடப்பதற்குள், அவனைக் கடந்துபோகிறவர்கள் திரும்பிப்பார்த்து அவனைப்பற்றிப் பேசிக்கொண்டனர். மேகநாதன் வேகமாக நடந்துசென்றான்.

“ அந்த ஆசாமிதானப்பா!”

“ பார்த்தால் அடக்கவொடுக்கமாய் இருக்கிறானே!”

“ பார்த்தால், அப்படித்தான் இருக்கிறான், ஆனால் பக்கம் பக்கமாக எழுதியிருக்கிறானாம்.”

மேகநாதன் அவர்களைத் தாண்டிச் சென்றான். அவர்கள் சிரிப்பது அவன் காதில் விழவில்லை.

“ காதல், காதல், காதல்! காதல் போயின் சாதல், சாதல், சாதல்!” என்று ஒரு பையன்

மேகநாதனைப் பார்த்ததும் அவன் காதில் விழ வேண்டுமென்றே பாடிக்கொண்டு போனான்.

வழியில் பேப்பர்கள் விற்றுக்கொண்டு போகிற பையன்கூட சும்மா விடவில்லை. மேகநாதனைப் பார்த்ததும், தன் குரலை உயர்த்தி, "பத்திரிக்கை வேணுங்களா, காதல்! குமுதம்!" என்று உரக்கச் சொன்னான்.

காட்டிலே போடப்பட்ட தீ பிடிப்பதற்குச் சிறிது நேரமாகும், பிடித்ததும் காட்டுத்தீ வேகமாகப் பரவிவிடும். அதைப்போல, மேகநாதனைப்பற்றிய பேச்சு, இரண்டுநாள் கழித்துக் கிளம்பினாலும் வெகு விரைவில் ஊர் முழுவதும் பரவிவிட்டது.

"அந்தப் பையன் எந்த ஊரென்று தெரியவில்லை. தாலுக்காக் கச்சேரியில் வேலையாம். அவன் காதற்கடிதங்கள் எழுதியிருக்கிறானாம்."

"அதுவும் பண்ணை பக்கிரிசாமிப் பிள்ளை வீட்டுப் பெண் குமுதவல்லிக்கு!"

"அந்தப் பெண்ணுக்கு ஒரு பாவமும் தெரியாது."

"ஏதோ இவன்போக்கில் எழுதினைத்தான். காதற்கடிதமாம், கத்தரிக்காயாம் எல்லாம் காலம் கெட்டுப்போச்சு!"

இப்படிச் சிலர் விவரித்துக்கொண்டனர்.

"அவன் அந்தப் பெண்ணுக்கு எழுதவில்லையாமே! ஏதோ ஒரு பத்திரிக்கைக்கு எழுதினானும் அதை வைத்துக்கொண்டு இவ்வளவு புரளியும்!"

"பத்திரிக்கைக்கென்றால், இப்படியிருக்காது; பண்ணை பக்கிரிசாமிப் பிள்ளை, அவர் பெண் குமுதவல்லி, பள்ளிக்கூட ஆண்டுவிழா, ஊர், தெரு, வீடு, தேதி எல்லாம் கொஞ்சங்கூடப் பிசகாமல் வந்திருக்கிறதாமே! அவன் கொண்ட காதல் ஒன்றைத்தவிர, மற்றபடி எழுதியதெல்லாம் கற்பனையின்றிச் சரியாக இருக்கிறதே!"

இப்படி ஒருசிலர் விவாதித்தனர்.

"காதலைப்பற்றி எழுதியதுகூட இருக்கட்டும். நமது ஊரைப்பற்றியே தாறுமாறாக எழுதியிருக்கானுமே! குள்ளநரிச்சமூகம், கொடுமைப்படுத்தும் சமுதாயம், கண்மூடிப் பழக்கங்கள், காலத்துக்குப் புறம்பான வழக்கங்கள் என்றெல்லாம், எழுதியிருக்கிறானும். சோம்பேரிக் கூட்டம், சுயநலக் கும்பல், காதலருமை தெரியாத கசடர்கள் என்றெல்லாம் அர்ச்சித்திருக்கிறானும்" என்று சிலர் கோபப்பட்டனர்.

அன்று ஊர் பூராவும் மேகநாதனின் காதற் கடிதங்களைப்பற்றிய பேச்சு அதிகமிருந்தது. அந்தக் கடிதங்களை அப்படியே அச்சுப்படுத்திப், புத்தகமாக வெளியிட்டிருந்தால், குறைந்தது இரண்டாயிரம்பிரதிகளாவது அந்த ஊருக்குள் அன்று விற்றிருக்கும். கடிதங்களைப் பற்றிப் பேசும்பொழுது, அவற்றில் வந்ததாகக் கூறப்பட்ட ஓரிரு வார்த்தைகள் அடிக்கடி உதாரணத்துக்குக் காட்டப்பட்டன.

"காதலெனும் நீரோடையில் கண்வளரும் மாமலரே!" இது மேகநாதனின் இரண்டாவது கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

"வானம்பாடி காதல்கீதம் பொழிகிறது, அது கேட்டு வானத்து முழுநிலா, நெஞ்சுருகிக் கண்ணீர்விட, அது செடிகொடிகளின்மீது பனி நீராய் விழுகிறது," இது மேகநாதனின் ஐந்தாவது கடிதத்தில் இருந்ததாம்.

"வில்லெறியும் புருவம், நீல மலர் விழிகள்! வெண்முத்துப் பற்கள்! பவளவாய் இதழ்கள்! தண்மதியைப் பழித்திடும் தவளவாணுதல்! அவள் அன்றலர்ந்த குமுதம்! அழியாத பொற்பாவாய்!" இது ஒரு கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததாம்.

கடிதங்களைப் பற்றிச் சொல்லும்பொழுது, ஒவ்வொருவரும் தங்களால் முடிந்தவரையில் கூட்டியோ, குறைத்தோ, அழகுபடுத்தியோ மற்றொருவரிடம் பரப்பி வந்தனர். ஒருநாள் பொழுதிற்குள் மேகநாதனின் பெயர் அந்த ஊர் பூராவும் பரவிவிட்டது.

எதிர்பாராத தாக்குதலை நாலா பக்கங்களிலிருந்தும் பெற்றதும், மேகநாதனின் உள்ளம் முதலில் குன்றிப்போய்ப், பின் மரத்துவிட்டது. மற்றவர்கள் என்ன சொல்லுகிறார்கள், என்ன செய்கிறார்கள் என்ற உணர்வே அவனுக்கு நின்றுவிட்டது. சித்தப்பிரமை ஏற்பட்டவன் போல அவன் இருந்தான். முதலில் அவனைக் கேலிசெய்தவர்களெல்லாம்கூட, அவனருகில் போய்ச், சமாதானப்படுத்த முயன்றார்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் என்ன சொல்லு

கிறார்களென்றே அவனுக்கும் புரியவில்லை. அவனுடைய நிலையைக்கண்டு, அவனுடன் வேலை பார்க்கும் கந்தப்பன் அவனை அழைத்துக் கொண்டு வெளியேறினான்.

விடுதி நோக்கி வரும் வழியில், கடிதங்கள் எப்படி வெளியாயின என்பதைப்பற்றிக் கந்தப்பன் விவரித்தான். பாண்டுரங்கத்தின் அறையைத் திறப்பதற்கு அவனிடம் சாவி வாங்கி வந்த அருணாசலம் என்பவன், தவறுதலாகப் பக்கத்து அறையைத் திறந்துவிட்டான். அங்கு மேகநாதனின் பெட்டி திறந்து, அதிலிருந்து ஒரு பாதி எழுதப்பட்ட காகிதம் கீழே பறந்து கிடந்தது. அதை எடுத்து மேஜைமேல் வைக்கும்போது, அவனையுமறியாமல் எழுதப்பட்டிருப்பதைப் படித்தான். காதல், கீதல் என்றிருந்ததும், பத்திரிகைக்கு ஏதாவது ஒரு கதை எழுதுகிறானோவென்றெண்ணி, இருந்த காதற் கடிதங்களையெல்லாம் படித்துவிட்டான். இவற்றை அவன் தன் நெருங்கிய நண்பனொருவனிடம் சொல்ல, இப்படி ஊர் பூராவும் பரவிவிட்டது.

அவற்றைப் பற்றி இப்பொழுது தெரிந்து கொண்டு என்ன பலன்? கடிதங்களைப்பற்றி எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. மேகநாதனைப் பார்ப்பவர்களெல்லாம் அதைப்பற்றிப் பேசாமலிருக்கப்போவதில்லை, அவர்கள் பேசிடும் கேலிச்சொற்கள், அவனது உள்ளத்தைப் புண்படுத்திக்கொண்டிருந்தன.

“காதற் கடிதங்கள் எழுதுகிறானாம்!”

“நமது ஊர்த் தாலுக்காக் கச்சேரிக்குக் கிடைத்த இலக்கிய கர்த்தா!”

“மூளைக்கோளாறு! அரைப் பைத்தியம்! அதனால்தான் இப்படியெல்லாம் எழுதுகிறான்!”

மேகநாதன் கேலிக்குரிய பொருளாகிவிட்டான். இலக்கியகர்த்தாவிலிருந்து, பைத்தியக்காரப் பட்டம்வரை கிடைத்திருந்தது. அதற்கு முன் குற்றம்புரியாதிருந்து, முதல் தடவையாகக் குற்றம்புரிந்து அதிலும் அகப்பட்டுக்கொண்டால் ஒருவன் எவ்வளவு சங்கடப்படுவானோ, அதிலும் செய்த குற்றம் கேட்போருக்குச் சிரிப்பைத் தருவதாக இருந்தால்—அவ்வளவு சங்கடத்தையும், வேதனையையும் மேகநாதன் அனுபவித்தான்.

நினைத்துப் பார்க்கும்பொழுது அவனுக்கே வேடிக்கையாயிருந்தது. இரண்டு நாட்களுக்குமுன் கடிதங்கள் கலைந்துகிடந்தபொழுது, ஒருவித அச்சம் வந்தது; மறுநாள் அது நீங்கியது; மூன்றாவதுநாள் அவன் தாக்கப்பட்டான் பலமாக. எவ்வளவு திடீர் மாற்றங்கள், குழப்பங்கள்!

விடுதிக்கு வந்ததும், கந்தப்பனைப் போகச் சொல்லிவிட்டு, மேகநாதன் தனது அறைக்குப் போனான். அறை கிடக்கும் அலங்கோலங் கண்டு அவன் திடுக்கிட்டான்.

அறையின் கதவு திறந்திருந்தது, உடைக்கப்பட்ட பூட்டு கீழே கிடந்தது. அறையிலிருந்த பெட்டி, சாமான்கள் தாறுமாறாகக் கிடந்தன. பெட்டியிலிருந்த கடிதங்களைக் காணோம்! மேகநாதன் தலையைப் பிடித்தவண்ணம் வெளியில் வந்தான்.

வெளியில் நான்கு ஆட்கள் கையில் தடியுடன் நின்றுகொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் முன்வந்து, “பண்ணை ஐயா உங்களை அழைச்சுவரச்சொன்னார்!” என்று விண்ணப்பித்தான். பண்ணையார் பக்கிரிசாமி பிள்ளை—அவர்தான் குமுதாவின் தந்தை—அவரிடமிருந்து அழைப்பு வந்திருக்கிறது!

(தொடரும்)

சமதர்மம் தழைக்க

நாம் அமைக்கும் சமதர்மம் தழைக்க—நிலைத்து நிற்க-சமுதாயம் திருத்தியமைக்கப்படவேண்டுமென்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. மோட்டார் செல்ல நல்ல சாலை தேவைப்படுவதைப்போன்று, பாட்டிற்குத் தாளம் ஒத்திருக்கவேண்டியது போன்று, ஆட்டத்திற்கு அரங்கம் சரியானதாயிருக்கவேண்டுவதுபோன்று, சமதர்மம் நிலைக்க, மக்கள் நல்ல புதிய உள்ளம் கொண்டவர்களாக இருக்கவேண்டும். அவர்களின் எண்ண ஏற்பாடுகள் மாற்றப்பட்டு, புதுமையை வரவேற்கும் பண்பு கொண்டதாய்ச் சமுதாயம் மாற்றப்படவேண்டும்.

—அறிஞர் அண்ணா.

விளைவும் விளக்கமும்

திராவிடத்தை வடநாட்டு முதலாளிகள் மட்டுந்தான் சுரண்டுகிறார்களா? தென்னாட்டு முதலாளிகள் யாரும் சுரண்டுவதில்லையா? வடநாட்டு முதலாளிகள் ஒழியவேண்டும் என்று கூறுவது தென்னாட்டு முதலாளிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகவா?

என்பன போன்ற வினாக்களை ஆங்காங்கு சிலர் எழுப்புகின்றனர்.

“திராவிடத்தை வடநாட்டு முதலாளிகள் மட்டுந்தான் சுரண்டுகிறார்கள்; தென்னாட்டு முதலாளிகள் யாரும் சுரண்டுவதேயில்லை” என்று திராவிட முன்னேற்றக் கழகம் எங்கும்—எப்பொழுதும் சொல்லியதில்லை.

பிர்லா, பாஜாஜ், டாட்டா, டால்மியா, செல்லாராம், கேவல்ஸ்ராம், வால்சந்த் ஹீராசந்த், சுராஜ்மல்ஸ், பாபாலால், கொயங்கா போன்ற வடநாட்டு முதலாளிகள் எந்தவித முதலாளித்வ அடிப்படையில் சுரண்டுகிறார்களோ, அதேவித முதலாளித்வ அடிப்படையில்தான் ராஜா சர் முத்தையா செட்டியார், டாக்டர் அழகப்பச் செட்டியார், சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், கருமுத்து தியாகராசச் செட்டியார், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், ‘ஹிந்து’ கே. சீனிவாசன், “சுதேசமித்திரன்” சி. ஆர். சீனிவாசன், ஜெமினி வாசன் போன்ற தென்னாட்டு முதலாளிகளும் சுரண்டுகிறார்கள். இதைத் திராவிட முன்னேற்றக்கழகம் மறக்கவோ—மறுக்கவோ—மறைக்கவோ முன்வரவில்லை. ஆனால் இருவர் சுரண்டல் முறையிலும் ஒரு வேற்றுமை உண்டு என்பதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பலகாலும் உணர்த்தி வருகிறது.

ரஷ்யா, அமெரிக்கா, சீனா, (ஜப்பான், பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, இந்தோனேஷியா, பாக்கிஸ்தான், பர்மா, ஈரான், ஈராக், ஹாலந்து, ஹங்கேரி) போன்ற நாடுகளெல்லாம், எப்படித் தத்தமக்கென்று ஒரு எல்லைக்கோட்டை அமைத்துக்கொண்டு, அந்த எல்லைக்கோட்டின் உள்ளே நின்று தமது அரசியல்—பொருளாதார—சமுதாயப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகின்றனவோ, அதேபோன்று, திராவிடமும் தனக்கென்று ஒரு எல்லைக்கோட்டை அமைத்துக்கொண்டு, அதன் உள்ளே நின்று, அரசியல்—பொருளாதார—சமுதாயப் பிரச்சினைகளைப் பேசவேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள் என்பதை முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த உணர்வின் அடிப்படையில் நின்று பார்த்தால்தான் வடநாட்டு—தென்னாட்டு முதலாளிகளின் சுரண்டல்களுக்குள்ள வேற்றுமையைத் தெரிந்துகொள்ள முடியும். வடநாட்டு முதலாளியின் சுரண்டலுக்கும், தென்னாட்டு முதலாளியின் சுரண்டலுக்கும் என்ன ஒரு வேற்றுமை என்றால், வடநாட்டுக்காரன் சுரண்டுகிற பணம் திராவிடத்தை வறிதாக்கிவிட்டுத், திராவிடத்தைவிட்டே அகன்று, திராவிடத்தின் உரிமை சிறிதும் செல்லாத வேற்று நாட்டுக்கு அடியோடு போய்ச் சேர்ந்துவிடுகிறது; ஆனால் தென்னாட்டுக்காரன் சுரண்டுகிற பணம் தென்னாட்டிலேயே தங்குகிறது. வடநாட்டுக்காரன் சுரண்டலால் திராவிடத்தின் வளம் குறைகிறது; தென்னாட்டுக்காரன் சுரண்டலால் திராவிடத்தின் வளம் கூடாவிட்டாலும், குறைவதில்லை.

பிர்லாவும் பஜாஜூம், டாட்டாவும் டால்மியாவும் சுரண்டுகிற பணம் பம்பாயிலேயோ, டில்லியிலேயோ, ஆமதாபாத்திலேயோ, அலகாபாத்திலேயோ போய்க்குடியேறி மாடமாளிகைகளாய்த், தோட்டம் துறவுகளாய்ப், பண்டம்பாடிகளாய் விளங்குகின்றன. அப்படிப்பட்ட சொத்துக்களின்மீது, இன்றல்லாவிட்டாலும், திராவிடம் பிரிந்த பிறகாவது உரிமை கொண்டாட வழி ஏற்படுமா? என்றால், ஒருக்காலும் ஏற்படாது! ஆனால் ராஜா சர். முத்தையா செட்டியாரும், அழகப்பச் செட்டியாரும், இரத்தினசபாபதி முதலியாரும், சி. ஆர். சீனிவாசனும் தாம் சுரண்டுகிற பணத்தை

இந்த நாட்டிலேயே வைத்துவிட்டு, இந்த நாட்டுச் சுடுகாட்டுக்கே செல்லவேண்டியவர்களாக இருப்பவர்கள். இவர்கள் எவ்வளவு பொருள் சுரண்டிவைத்திருந்தாலும், அவ்வளவு மீதும் உரிமை கொண்டாட, திராவிடத்துக்கு என்றென்றும் வழிவகை இருக்கிறது. வடநாட்டு முதலாளிகளின் சுரண்டல் முறை திராவிடத்தைத் தேயவைக்கும் சுரண்டல் முறையாகும்; தென்னாட்டு முதலாளிகளின் சுரண்டல் முறை திராவிடத்திற்குத் தொல்லை கொடுக்கும் சுரண்டல் முறையாகும். தொல்லை மட்டுமே கொடுக்கும் சுரண்டல் முறையைக் காட்டிலும், தொல்லையையும், தேய்வையும், சேர்த்துத்தரும் வடநாட்டு முதலாளிகளின் சுரண்டல் முறை முதலில்—உடனடியாக ஒழிக்கப்படவேண்டும்; அடுத்துத் தென்னாட்டு முதலாளிகளின் சுரண்டல் முறை உறுதியாக ஒழிக்கப்படவேண்டும் என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் திட்டவட்டமாகக் கூறுகிறது.

இருசாராரின் சுரண்டல் முறைகளையும் சேர்த்து ஒழிப்பதற்கான வாய்ப்பும், வசதியும் அவ்வளவு தெளிவாகவும், எளிமையாகவும் உடனடியாகத் தென்படாத காரணத்தால் தான், அவசரமாகவும் அவசியமாகவும், முதன்மையாகவும் முக்கியமாகவும் ஒழிக்கப்படவேண்டியது வடநாட்டுச் சுரண்டல்முறை என்று வற்புறுத்தப்படுகிறது. சீனாவைச் சிவப்பாக மாற்றிய மா-சே-துங் கூட, உள்நாட்டு முதலாளிகள்—வெளிநாட்டு முதலாளிகள் என்ற இரு சாராரையும் சேர்த்து ஒரேயடியாக ஒழிக்க வேண்டும் என்ற முயற்சியில் இறங்காமல், முதலில் வெளிநாட்டு முதலாளிகளை விரட்டியடிக்கிற நடவடிக்கைகளில்தான் மிக்கக் கவனம் செலுத்திவருகிறார். வெளிநாட்டு முதலாளிகளை விரட்டியடிக்க தேசிய முதலாளிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதில் மா-சே-துங் தயக்கம் எதுவும் காட்டவில்லை. அதே தன்மையில், திராவிடத்திலிருந்து வெளிநாட்டு வெள்ளை முதலாளிகளும், வடநாட்டுக் கொள்ளை முதலாளிகளும் முதலில் விரட்டப்படவேண்டும். பிறகு நாளடைவில் உள்நாட்டு முதலாளிகள் ஒழிக்கப்படவேண்டும் என்று கழகம் கூறும் கருத்து எப்படித் தவறுடையதாகும்.

வடநாட்டுச் சுரண்டல் ஒழியவேண்டும் என்று கூறினால், உள்நாட்டுச் சுரண்டல் நீடித்து வாழவேண்டும் என்று கூறுவதாகப் பொருள் கொண்டுவிடவேண்டிய அவசியமில்லை. ஒழிப்பதில் முதலிடம் வடநாட்டுச் சுரண்டலுக்கும் இரண்டாவது இடம் உள்நாட்டுச் சுரண்டலுக்கும் தருகிறோம் என்று பொருள்.

திராவிடம் என்ற கழனியில் வடநாட்டு எருமைகளும் இறங்கி மேய்கின்றன; தென்னாட்டு எருமைகளும் மேய்கின்றன. நமது பயிரைத் தின்றுவிட்டு அடுத்த வீட்டில்போய்ப் பால்கறக்கும் எருமைகளாகப் பார்த்து முதலில் விரட்டியடித்து, திராவிடக் கழனிக்கு வேலியமைத்து, வாசல் வைத்துப், படல்கதவுகளை இழுத்துச் சாத்திப், பிறகு கையில் வலுவான இருப்புத் தடியைத்தூக்கி, நமது எருமைகள் முதுகில் நன்றாக இரண்டடிவைத்து, நமது கொட்டில்களில் இழுத்துக்கொண்டு வந்து அவைகளைக் கட்டி, மடியில் அவை சேர்த்து வைத்திருக்கும் பாலையெல்லாம் ஒட்டக் கறந்து கொண்டு விடலாமே! அடுத்த வீட்டு எருமை—நமது எருமை ஆகிய இரண்டுவகைகளில், விரட்டப்படவேண்டிய எருமை அடுத்த வீட்டைச் சேர்ந்தது; அடக்கப்படவேண்டிய எருமை நமது வீட்டைச் சேர்ந்தது. இதில் எது முதலில் செய்யப்படவேண்டிய செயல் என்றால், அடுத்த வீட்டு எருமையை விரட்டுவதாகத்தான் இருக்கமுடியும்.

தென்னாட்டு முதலாளிகள் சுரண்டிச் சேர்க்கிற அவ்வளவு சொத்தையும், பொருளையும், வசதிகளையும் திராவிட மக்களாட்சி, என்றைக்காவது ஒருநாள் அப்படியே, இம்மிவிடாமல் திராவிட மக்களுக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும்; ஆனால் வடநாட்டு முதலாளிகள் சுரண்டிக்கொண்டுபோய் வடநாட்டில் குவிக்கும் வளத்தில், இம்மி அளவும் மீட்கமுடியாது. எனவேதான் எவ்வளவு விரைவாக வெள்ளை முதலாளிகளும், வடநாட்டு முதலாளிகளும் விரட்டியடிக்கப்படுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு திராவிடத்தின் நல்வாழ்வுக்கு வழிகோலுவதாகும். பிரிந்து வாழும் திராவிடத்தில் சமதர்மக் குடியாட்சிதான் கோலோச்சும் என்பதை ஐயுறுவோர் அனைவரும் உணர்வார்களாக!

பறு கழுத்து—பிளவுஸ்

மூன்று டக்கு (டார்ட்டு) அமைந்த பிளவு ஸின் விளக்கமே இது.

அளவுகள்

இடுப்புவரை நீளம்	15	அங்
பாதித்தோள்	6¾	,,
மார்பு சுற்று அளவு	36	,,
இடுப்பு சுற்று அளவு	28	,,

பின்பக்கத்தின் விளக்கம்

1-ல் இருந்து 0 வரை 15½ அங்.
(இடுப்புவரை நீளம் + ½ அங்.)
2-ல் இருந்து 0 வரை 7½ அங்.
(¼ மார்பளவில் 1½ ங். குறைவு)
3-ல் இருந்து 0 வரை 7 ,,
(பாதித்தோள் + ¼ அங்.)
4-ல் இருந்து 0 வரை 2¾ அங்.
(1/12 மார்பளவில் ¼ அங். குறைவு)
5-ல் இருந்து 0 வரை 1 அங்.
6-ல் இருந்து 3 வரை ¾ ,,
7-ல் இருந்து 3 வரை நேர்க்கோடு இணைக்க.
8-ல் இருந்து 7 வரை 3 அங்.
9-ல் இருந்து 2 வரை 10 ,,
(¼ மார்பு + 1 அங்.)
10-ல் இருந்து 1 வரை 10 ,,
11-ல் இருந்து 10 வரை ¾ ,,

முன்பக்கத்தின் விளக்கம்

12-ல் இருந்து 13 வரை 7½ அங்.
(¼ மார்பளவில் + 1½ அங். குறைவு)
13-ல் இருந்து 9 வரை 10¼ அங்.
(¼ மார்பளவு + 1¼ அங்.)
14-ல் இருந்து 12 வரை 15½ அங்.
15-ல் இருந்து 12 வரை 7¼ ,,
(பாதித்தோள் + ½ அங்.)
16-ல் இருந்து 12 வரை 3 ,,
(1/12 மார்பளவு)
17-ல் இருந்து 15 வரை நேர்க்கோடு இணைக்க.
18-ல் இருந்து 15 வரை ¾ அங்.
19-ல் இருந்து 17 வரை 3 ,,
20-ல் இருந்து 12 வரை 4½ ,,
21-ல் இருந்து 20 வரை 2¼ ,,
22-ல் இருந்து 9 வரை 2 ,,
23-ல் இருந்து 22 வரை 2½ அங்.
24-ல் இருந்து 13 வரை 2 அங்.
25-ல் இருந்து 24 வரை 2 ,,
26-ல் இருந்து K வரை 1½ ,,
27-ல் இருந்து 14 வரை ½ ,,
28-ல் இருந்து 10 வரை ¾ ,,

A, B உள்ள இடத்தில் முன்பக்கம் திறப்பு (ஒப்பன்) அமைக்கவும்.

28 எண்ணுக்கு கீழ்ப்பக்கம் ½ அங், துணி வைத்தும், 22 எண்ணுக்கு மேல் பக்கம் ½ அங். துணி வைத்தும் வெட்டவும். சயிட் பக்கம் டக்கு (டார்ட்டு) அமைப்பதற்காக.

22 எண்ணுள்ள சயிட் பக்கம் டக்கு (டார்ட்டு) ½ அங். அகலம், நீளம் 2½ அங். அமைக்கவும்.

24 எண்ணுள்ள இடத்தில் (முன்பக்கம் திறப்பில்) ½ அங். அகலம் 2 அங். நீளம் டக்கு (டார்ட்டு) அமைக்கவும்.

K உள்ள இடத்தில் (தோள் வளைவில்) ½ அங். அகலம், 1½ அங். நீளம் டக்கு (டார்ட்டு) அமைக்கவும். பின்பக்கம் இடுப்பு டக்கு (டார்ட்டு) ¾ அங். அகலம், 3½ அங். நீளம் இரண்டு அமைக்கவும்.

முன்பக்கம் இடுப்பு டக்கு (டார்ட்டு) ½ அங். அகலம், 3½ அங். நீளம் ஒரு பக்கத்திற்கு இரண்டு வீதம் இரண்டுபக்கம் நான்கு டக்கு (டார்ட்டு) அமைக்கவும்.

மொத்தம் 6 டக்கு (டார்ட்டு) அமைத்து இடுப்புப்பட்டி ஒரு அங்குலம் துணி திருப்பி (பால்சன்) செய்து இடுப்பு அளவு + ½ அங். அமைக்கவும்.

விளக்கப்படத்தின் வடிவம்போன்று அமைந்துள்ளனவா என்று ஒத்திட்டுப் பார்த்து வெட்டவும்.



Regd. No. M 6296

64

விற்பனையாளர்க்கு

"மன்றம்" விற்பனையாளர்களில், உடனுக்குடன் பட்டியல் தொகையை அனுப்பிவைக்காமல் காலந்தாழ்த்தியும், அதிக நிலுவை நிறுத்திவைத்தும் தொல்லை கொடுப்பவர்களின் செயல் மிக வருந்தத்தக்கதாக இருக்கிறது. அவர்கள், கடமையையும் நாணயத்தையும் காப்பாற்றுவது அவர்களுக்கும் எமக்கும் நலம் பயப்பதாகும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறோம். ஒழுங்காகத் தொகை அனுப்பிவரும் விற்பனையாளர்க்கு எமது நன்றி.

பாக்கி நிறுத்தி வைத்திருக்கும் விற்பனையாளருக்கு இதழ்கள் கண்டிப்பாக நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விற்பனையாளர்களிடத்தில் கீழ்க் குறிப்பிட்டுள்ள இதழ்கள் மட்டும் இருந்தால் அனுப்பிவைக்கவும். கணக்கில் சரிசெய்து கொள்ளப்படும்.

இதழ்	தேதி
1	1—5—53
2	15—5—53
5	1—7—53
9	1—9—53
17	1—1—54

நிர்வாகி, "மன்றம்"

புதிய வெளியீடு !

அறிஞர் அண்ணா

தீட்டியது

ராஜபார்ட்

ரங்கதுரை பாகவதர்

விலை அணா நான்கு

கிடைக்குமிடம் :

மறுமலர்ச்சி நூல்நிலையம்

8, குமரப்ப முதலித் தெரு, சென்னை-1.

சந்தாதாரர்களுக்கு

சந்தா அனுப்பும் தோழர்கள் தங்கள் முகவரியைத் தெளிவாக எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

சந்தா முடிவதற்குமுன் முடிவுபற்றி சந்தாதாரர்களுக்கு தெரிவித்துவருகிறோம். குறித்த நாளில் சந்தா புதுப்பிக்கப்படாவிட்டால் இதழ் வி. பி. மூலம் அனுப்பிவைக்கப்பெறும். சந்தாவைப் புதுப்பிக்க விருப்பமில்லாதோர் அதுபற்றி முன்கூட்டியே அறிவித்துவிட வேண்டுகிறோம்

சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்போதும் பணம் அனுப்பும்போதும் தங்கள் சந்தா எண்ணையும் குறிக்க வேண்டும்.

நிர்வாகி, "மன்றம்"

தோழர்களுக்கு

"மன்றம்" பழைய இதழ் கேட்டு எழுதுவோர் இதழ் ஒன்றுக்கு 5 அணா அஞ்சல் தலை வீதம் அனுப்புதல் வேண்டும். கீழ்க்கண்ட தேதிகளில் வெளிவந்த இதழ்கள் கைவசம் இல்லை.

இதழ் எண்	தேதி
1	1—5—53
2	15—5—53
17	1—1—54

"மன்றம்" மலர் 2-ல் முதல் இதழ் தவிர மற்ற 15-5-53 முதல் 15-4-54 வரையுள்ள 23 இதழ்கள் கொண்ட பைண்ட் செய்யப்பெற்ற புத்தகங்களில் சில பிரதிகள் கைவசம் இருக்கின்றன. தேவையுள்ளோர் ரூ 7—0—0 அனுப்பினால் பதிவு அஞ்சலில் அனுப்பிவைக்கப்படும்.

நிர்வாகி, "மன்றம்"

26, நைனியப்பன் தெரு,

மண்ணடி :: சென்னை-1.